
Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்புகொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency post Office
303, K.K.S. ROAD JAFFNA T.P. 021 - 222 2670
FAX - 222 3214 email-del-smskr @ evreka.lk
(சி/1422)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 09 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 28 (26.09.2003) வெள்ளிக்கிழமை இதழ் :356

# தியாகி திலீபனின் இறுதிநாள் நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் இன்று அனுஷ்டிப்பு!



(யாழ்ப்பாணம்)

தியாகி லெப்.கேணல் திலீபனின் 16 ஆம் ஆண்டு நினைவுதின இறுதி நாள் நிகழ்வுகள் இன்று தமிழர் தாயகமெங்கும் மிகவும் உணர்வெழுச்சியுடன் நடைபெறவுள்ளது.

திலீபனின் நினைவுநாள் நடைபெறும் இடங்கள் அனைத்திலும், காலை 9 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

நல்லூரில் நடைபெறும் நினைவுதின நிகழ்வு - காலை 9 மணிக்கு உண்ணாவிரதத்துடன் ஆரம்பமாகி மாலை 4 மணிக்கு நிறைவுபெறும். முன்னதாக நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத் தூபிக்கு பொதுச் சுடர் ஏற்றப்பட்டு, ஊர்திப் பவனி - திலீபன் உண்ணாநோன்பிருந்த இடத்தைச் சென்றடையும். எனவே, யாழ்-நல்லூர் கோட்டம், வலிகாமம் கோட்டப் பொதுமக்கள் அனைவரையும் காலை 8.30 மணிக்கு முன்னர் திலீபனின் நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். நல்லூரில் இடம்பெறும் உண்ணாவிரத நிகழ்விற்கு - நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வடக்கு, வீதியில் விசேட பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாலை 6 மணிக்கு பொதுக் கூட்டமும், கலை நிகழ்வுகளும் ஆரம்பமாகும்.

வடமராட்சி கோட்டத்தில் - அல்வாய் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் தியாகி திலீபனின் நினைவுதினம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் சமர்ப்பிக்கவுள்ள திட்ட யோசனைகள்

# பொதுமக்களின் அங்கீகாரத்துக்காக சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும்!



## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளால் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படும் வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டவரைபை அரசாங்கம் ஆராய்ந்த பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.**

**அங்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்ற பின்னர், பொதுமக்களின் அங்கீகாரத்துக்காக சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும் என, அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக தமது யோசனைகளை ஒக்ரோபர் மாதம் 2 ஆம் வாரத்துக்குள் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்போவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்

பாரிஸில் நடைபெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில் விடுதலைப் புலிகள் இந்த யோசனைகளைத் தயாரித்திருப்பதாக, அமைச்சர் மேலும் கூறினார்.

இந்த யோசனைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பதற்கு முன்னர், தங்களுடைய ஆலோசகரிடம் சமர்ப்பிக்கப்படும்.

அயர்லாந்தின் டப்ளின் நகரில் விடுதலைப் புலிகள் நடத்தவுள்ள ஆலோசனைக் கூட்டம் அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பு நிறைவுபெற்றுவிடும் என்று, விடுதலைப் புலிகள் அறிவித்திருப்பதாகவும், அதனைத் தொடர்ந்து ஒரு வாரத்துக்குள் யோசனைகளை அர (10 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் இனப்பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு காணமுடியாது!

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் தீர்வுகாணமுடியது என, விடுதலைப் புலிகளும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் உணர்ந்துள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சேர்.ஜோன் கொத்தலாவல இராணுவ பயிற்சிக் கல்லூரியில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது,

இலங்கையின் இனப்பிரச்சினை யுத்தத்தின் மூலம் தீர்வு காணமுடியாது. அரசியல்ரீதியாகவே தீர்வு காண வேண்டும் என்பதில் தமக்கு அக்கறை இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையின் சமாதானப் பேச்சுக்களை சரியான முறையில், கொண்டு செல்லப்படவேண்டும். இனப்பிரச்சினையை அரசியல்ரீதியாகத் தீர்வுகாண்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி தமது ஆதரவைத் தெரிவித்துவருகிறது.

நாட்டில் குற்றச்செயல்கள் அதி (10 ஆம் பக்கம் பார்க்க)

# பிரிட்டிஷ் - புலிகள் பிரதிநிதிகள் அம்பாறையில் நேற்று சந்திப்பு

(மட்டக்களப்பு)

இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகராலய அரசியல் பிரிவு செயலாளர் மார்க்கிரட் ரொங்கியூ தலைமையிலான குழுவினர், நேற்று அம்பாறை மாவட்டத்திலுள்ள விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்து உரையாடியுள்ளனர்.

அக்கரைப்பற்றிலுள்ள விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைச் செயலக மண்டபத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் சார்பில் (10 ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாகரனின் படத்தை மாணவர் எடுத்துவர முகமாலையில் படையினர் அனுமதி மறுப்பு!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் உருவப் படம் மற்றும் தேசியக்கொடி என்பவற்றை எடுத்துவந்த பல்கலைக்கழக மாணவர்களை முகமாலை சோதனைச் சாவடியில், படையினர் கடும் சோதனைக் குட்படுத்தியதுடன், அவற்றினை எடுத்துச் செல்வதற்கு அனுமதி மறுத்தனர். இதனால், மாணவர்களுக்கும் படையினருக்கும் இடையில் கடும்வாக்குவாதம் இடம்பெற்றது.

வவுனியாவில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வை முடித்துக்கொண்டு திரும்பிய யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் அங்கு வழங்கப்பட்ட தேசி (10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



இப்படியாவது பழிவாங்கலாமென நினைச்சிட்டினம்.

# புலிகளின் தளபதி கருணாவை அமைச்சர் எஸ்.பி. சந்திப்பார்!

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் சமுர்த்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக, விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணாவுடன், சமுர்த்தி, விவசாய அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க சந்திப்பொன்றை நடத்தவுள்ளார்.

விடுதலைப் புலிகளின் கரடியனாறு தேனகம் விடுதியில் நாளை இந்தச் சந்திப்பு இடம்பெறுமென தெரிவிக்கப்படுகிறது.

# மக்களின் போக்குவரத்துக்காக மன்னார்-மடு வீதி நேற்று திறப்பு

(மன்னார்)

மன்னாரிலுள்ள மடுவீதி பொதுமக்களின் போக்குவரத்திற்காக நேற்றுக்காலை 10 மணிக்கு உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் வி.விஸ்வலிங்கம் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் - மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அமிர்தாப், புனர்வாழ்வு, மீள்குடியமர்வு, அகதிகள் விவகார அமைச்சர் டொக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா, வன்னி இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, மன்னார் (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226797
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1423)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# இந்த வார பலன்கள்

## 26.09.2003 ~02.10.2003 (திருக்கணிதம் ஜோதிடம்)

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| செவ் யுரே | 27 இர 7.57துல.சந்<br>29 இர 8.54 விரு.சந்<br>01 இர 10.59தனு.சந் | | |
| நெப் | | | குரு புதன் |
| | | கேது | சூ சந் சுக் |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் மூலம் வருவாய் கிடைக்கும். உற்சாகமாக கருமங்களைச் செய்யலாம். உடலாரோக்கியத்தைப் பேண வேண்டும். கவலையீனமாக இருந்தால் வைத்தியச் செலவு அதிகமாகும். குடும்பத்தில் அன்பும் மகிழ்ச்சியும் நிலவும். திருமணமாகாமல் இருப்பவர்களுக்கு அருமையான சந்தர்ப்பங்கள் கிடைக்கும். பிள்ளைகளால் நண்பர்களால் உதவிகள் உண்டு. வீட்டில் விருந்தாளிகளுக்கு குறைவில்லை. உத்தியோகத்தர்கள் மகிழ்ச்சியுடன் தொழில் செய்து ஸ்தாபனத்தினரின் நன்மதிப்பை பெறுவார்கள். வியாபாரிகள் எதிர்பார்த்தவாறு முன்னேற்றமடைவார்கள். மாணவர்கள் ஆசிரியர்களின் நன்மதிப்பை பெறுவார்கள்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதம், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இவ்விராசிக்காரர்களுக்கு தொழில் மந்தநிலையிலேயே இருக்கும். மன உற்சாகம் குன்றிக் காணப்படுவார்கள். மனச் சோர்வு காண்ப்படும். தேகசுகம் இடையிடையே பாதிப்படைவதால் மருத்துவ உதவி தேவைப்படும். குடும்பத்தில் சில மனக் கஷ்டங்கள் நிம்மதிக் குறைவுகள் காட்டும் தொடங்கிய கருமங்களில் எதிர்பார்த்த முடிவுகள் கிட்டாமல் போகலாம். பிராயணச் செலவுகள் குடும்பச் செலவுகள் அதிகமாகும். திருமணத்தை எதிர்நோக்குவோருக்கு ஏமாற்றமே காத்திருக்கும். உத்தியோகத்தர்கள் வேலைப்பளுவினால் நிம்மதியின்றி காணப்படுவார்கள். வியாபாரிகளுக்கு வெளிநாட்டுப் பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் வியாபாரம் செய்வதால் வரவு தாராளமாக இருக்கும். மாணவர்கள் தங்கள் கல்வி முயற்சிகளில் கூடிய அக்கறை செலுத்தவேண்டும்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



இவர்களுக்கு பிரயாசை கூடுதலாக இருப்பினும் செய் தொழில முன்னேற்றம் உண்டு. மனமகிழ்ச்சியும் குதூகலமும் உண்டு. தொடக்கிய கருமங்கள் தாமதமாகவே நிறைவேறும். தேகசுகம் பாதிப்படையாது. பிரயாணத்தின்போது பொருட்களைப் பற்றி அவதானம் தேவை. பறிபோகும் சாத்தியங்கள் உண்டு. தூரத்தில் உள்ள இனத்தவர்களால் உதவி கிட்டும். திருமணமாகாதோருக்கு பல சோதனைகள் ஏற்படலாம். உத்தியோகத்தவர்கள் தாம் நினைத்தவாறு கருமத்தை நடத்தக் கூடியதாக இருக்கும். வியாபாரிகளுக்கு இருந்த முதலீடுகள் நன்கு விற்பனையாகும். மாணவர்கள் விளையாட்டில் கூடிய கவனஞ் செலுத்துவார்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*

கடகராசியினருக்கு வாழ்க்கையில் கசப்புகள் தோன்றும். தொழில்களில் முன்னேற்றம் காண்பது கடினம். தேக நிலைகளைப் பேணுதல் நன்று. குடும்பத்தில் சச்சரவுகள் ஏற்பட இடமுண்டு. மௌனத்தைக் கடைப்பிடிப்பது நன்று. வீண் செலவுகள் கட்டுப்படுத்த முடியாமல் அதிகமாகும். கடன் தொல்லைகளும் தவிர்க்க முடியாமல் இருக்கும். தூரதேசத்திலிருந்து நற்செய்திகள் வரும். நண்பர்கள், பிள்ளைகளின் உதவி கிடையாது. புதுவாழ்க்கையை எதிர்பார்ப்போருக்கு கருமம் கைகூடி மகிழ்ச்சியில் திளைப்பார்கள். உத்தியோகத்தர்களுக்கு சக உதவிகள் எதிர்பார்ப்பது கஷ்டம். பெருமையே வளரும். வியாபாரிகளுக்கு சரக்குகள் தேங்கிக் கிடக்கும். தொழில் சம்பந்தமான பிரயாணங்கள் கைகூடும். மாணவர்கள் ஊக்கத்துடன் செயற்பட்டால் சித்தியடையலாம்.



### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம)*



இவர்களுக்கு நல்ல சிந்தனைகளும், புது முயற்சிகளில் ஈடுபாடும் அதிகரித்துக் காணப்படும். எனினும் வரவிலும் பார்க்கச் செலவு கூடுதலாக இருக்கும். தேசசுகம் இடையிடையே பாதிப்படைவதால் வைத்தியச் செலவுகளும் அதிகமாகும். பலரோடும் அன்பாகப் பழகுவதால் எல்லோருடைய பாராட்டுகளுக்கும் உரியவராவர். அதிகமாக பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கும். திருமணமாகாதோருக்கு சற்றுத் தாமதமாகக் கருமம் நிறைவேறும். அடிக்கடி இனசனப் பந்துக்கள் வீட்டுக்கு வருவதால் குதூகலம் ஏற்படும். உத்தியோகத்துறையிலுள்ளோர் தமது க்ருமங்களில் கூடுதலான அக்கறை உடையவர்களாக இருப்பார்கள். வியாபாரிகள் எவ்வளவு முயற்சி எடுப்பினும் வருமானம் குறைவாகவே இருக்கும். மாணவர்கள் மிகக் கவனத்துடன் கல்வியில் ஈடுபட்டு முன்னேற்றமடைவர் தரகர்களுக்கு மேலதிகாரிகளுடன் மனஸ்தாபங்கள் தோன்றும். காதல் விடயங்களில் ஈடுபட்டோர் ஏமாற்றமடைவர். வியாபாரிகள் குறைந்த லாபத்தையே பெறுவர். வங்கி நிலையை சரிசெய்வதில் கஷ்டமடைவர். மாணவர்களுக்கு இடையிடையே சிறு சுகக்குறைகள் தோன்றி, கல்வியைப் பின்னடையச் செய்யும்.

### கன்னி


*(உத்தரம் 2, 3 4 ஆம் பாதங்கள, அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னி ராசிக்காரருக்கு மனத்தில் விசனமும் விரக்தியும் தோன்றினாலும் தொழில்களில முன்னேற்றமுண்டு. செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்வது நன்று. தேகசுத்தைப் பேணிக் கொண்டால் வைத்தியச் செலவிலிருந்து தவறலாம். குடும்பத்தில் சில கருத்து வேற்றுமைகள் தோன்றக் கூடும். எனினும் அவை சமாளிக்கக் கூடியதாக இருக்கும். கொடுக்கல்களிலும், பிரயாணத்தின்போதும் அவதானமாக இருக்கவேண்டும். திருமணமாகாதோருக்கு விரைவில் கருமம் கைகூட வாய்ப்புக்கள் உண்டு. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகமானாலும் சமாளிக்கக் கூடியதாக இருக்கும். வியாபாரம் மத்திமமாக இருப்பினும் நாளடைவில் முன்னேற்றம் காணும். மாணவர்கள் குறைந்த பாடங்களில் கவனம் செலுத்தவேண்டும்.

### துலாம்

*(சித்திரை 3 , 4 ஆம் பாதங்கள, சுவாதி விசாகம் 1,2, 3 ஆம் பாதங்கள்)*



துலாராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் முறையில் செல்வாக்கும், வருவாயும் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபகருமங்கள் நடக்கும். உறவினர்களால் சில கஷ்டங்கள் தோன்றக்கூடும். தேகசுகம், குடும்பசுகம் நன்றாக இருக்கும். மகிழ்ச்சி நிலவும். தொடங்கும் கருமங்கள தடையின்றி அனுகூலமாகும். நண்பர்களால் உதவி உண்டு. இவர்களுக்கு தொழில் முயற்சிகள் நல்ல பலனைக் கொடுக்கும். அந்நிய நாட்டுத் தொடர்புகளும் வருவாயைத் தரும். தேகசுகம் பாதிப்படையாது. வீட்டில் சுபகருமங்கள் நடக்க இடமுண்டு. இனஜன பந்துக்கள் மிக நெருக்கமாகப் பழகுவார்கள். கடன் தொல்லைகள் ஏதும் இருப்பின் அவைகளிலிருந்து மீள வழி பிறக்கும். திருமணத்தை எதிர் நோக்குவோருக்கு கருமம் கைகூடும். வெளிநாட்டுப் பயணங்கள் நற்பலன் தரும். உத்தியோகத்துறையிலுள்ளோருக்கு இடமாற்றங்கள் ஏற்படினும் நன்மையாகவே இருக்கும். வியாபாரிகளுக்குப் பழைய முதலீடுகள் நன்கு விற்பனையாகி லாபமீட்டக் கூடியதாக இருக்கும். மாணவர்கள் தமது கருமத்தில் ஊக்கமுடையவராகக் காணப்படுவர்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



இவ்விராசியினருக்கு தொழில் சமபந்தப்பட்ட விஷயங்களில் முட்டுக்கட்டைகள் தோன்றும். இடையிடையே மனச்சஞ்சலம் ஏற்படும். தேவையற்ற விடயங்களில தலையிடுவதைத் தவிர்த்தல் நன்று. அட்ட மத்துச் சனி நடக்கிறது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். தொழில் சம்பந்தமான பயணங்கள், இடமாற்றங்கள் ஏற்படலாம். குடும்பத்தில் சச்சரவுகள் தோன்றும். இனத்தவர்களிடையே பகைமை மனப்பான்மை இருக்கும். பிரயாணங்களில் பொருட்கள் தவறக் கூடிய தன்மையுண்டு. அவதானம் தேவை. காதலில் ஈடுபட்டுள்ளோர் தோல்வி காண்பர். உத்தியோகத்திலுள்ளோர் கடுமையாக வேலை செய்யவேண்டி ஏற்படும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் நட்டத்தையே தரும். மாணவரகள் உற்சாகம் குன்றிக்காணப்படுவர்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



இவர்களுக்கு தொழிலில் நன்மையும் திடீர் உயர்ச்சியும் ஏற்படும். தொடங்குங் கருமங்கள் எளிதில் அனுகூலமாகும். வீட்டில் சந்தோஷமும் குதூகலமும் காணும். பந்துக்களின் வருகை அதிகமாகும். தேகசுகம் நன்றாக இருக்கும். பிள்ளைகளால் உதவிகள் உண்டு. வெளிநாட்டுப் பிரயாணத்தை எதிர்பார்ப்போருக்கு நல்ல அனுகூலம் கிடைக்கும். பலகாலமாக விரும்பிய பொருட்கள் தற்போது வந்து சேரும். இல்லறத்தில் இணைய விரும்பியவர்களுக்கு யாவும் இனிதாக அனுகூலமாகும். உத்தியோகத்தர்களுக்கு தாம் விரும்பியவாறு கருமமாற்றக் கூடியதாக இருக்கும். வியாபாரிகளுக்கு நல்ல லாபம் கிட்டும். முதலீடுகளுக்கும் உகந்த காலம். மாணவர்கள் முன்னேற்றமும், பாராட்டுக்களும் பெறுவர்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*

மகர ராசியில் பிறந்தவர்களுக்கு இவ் வாரம் நற்பலன்கள் குறைவாகவே இருக்கும். பிரயாசைப்பட்டு தொழில் செய்தாலும் அதற்கேற்ற லாபம் கிடையாது. வரவிலும் பார்க்க செலவுகள் அதிகரித்துக் காணப்படும். கடன் தொல்லைகளும் ஏற்பட இடமுண்டு. தேக சுகம் குடும்பசுகம் குறைவதால் மருத்துவச் செலவுகளும் அதிகமாகும். இனஜன பந்துக்களுடன் கசப்புணர்வுகள் தோன்றும். விவாகப் பலன்கள் தள்ளிக்கொண்டே போகும். உத்தியோகத்தர்கள் கூடுதலான வேலையைச் செய்ய வேண்டியிருக்கும். சக உதவிகளை எதிர்பார்க்க முடியாது. வியாபாரிகளுக்கு நட்டமே அதிகமாகும். முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். மாணவர்களுக்கு ஊக்கம் குறைவாகவே இருக்கும்.



### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



இவர்களுக்கு தொழில்களில் சில கஷ்டங்கள் இருப்பினும் இறுதியில் நன்மையாகவே முடியும். எதையும் சமாளிக்கக்கூடிய தன்மை இருக்கும். குடும்பத்திலும் சில கருத்து வேறுபாடுகள் தோன்றினாலும் பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்தாது. கொடுக்கல் வாங்கள்களை அவதானமாகச் செய்யவும். வீண் விடயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும். வெளிநாட்டுப் பிரயாணங்கள் கஷ்டப்படுவதைக் கொடுக்கும். மங்கல கருமங்கள் கைகூடுக்கூடிய வாய்ப்பு நெருங்கி வருகிறது. உத்தியோகத்தை ஏற்றுச் செய்பவர்கள் தம்மிஷ்டம் போல் அதனைச் செவ்வனே செய்யமுடியும். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்ததிலும் பார்க்க குறைந்த லாபமே கிடைக்கும். மாணவர்களுக்கு முயற்சிக்கேற்ப சித்தியுண்டு.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம் உத்தராட்டாதி, ரேவ தி)*

மீனராசியினருக்கு தொழில் வளம் நன்றாக இருக்கிறது. ஊக்கத்துடன் செயற்பட்டால் லாபம் நிச்சயம். தொடங்குங் கருமங்கள் விரைவில் அனுகூலமாகும். அடிக்கடி பிரயாணங்களை மேற்கொள்ளும் வாய்ப்புண்டு. வாகனங்களை வைத்து தொழில் செய்வோர் லாபமடைவர். தேகசுகம் குடும்பசுகம் நன்றாக இருக்கும். கடன் தொல்லைகள் இருப்பின் விரைவில் நேர்செய்ய முடியும். திருமண விடயங்கள் நிச்சயிக்கப் பட்டாலும் கருமம் கைகூடுவதில் தாமதம் எடுக்கும். உத்தியோகத்தர்களுக்கு மனம்போல் கருமங்களை ஆற்றக்கூடியதாகயிருக்கும். மேலதிகாரிகளின் ஒத்தாசையுண்டு. வியாபாரிகளுக்கு தொழில் சம்பந்தமான பிரயாணம் செய்ய வேண்டியிருக்கும். லாபமும் ஓரளவுண்டு. மாணவர்கள் தமது கல்வியில் ஊக்கம் செலுத்தினால் முன்னேற்றமுண்டு.



# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு தண்டப்பணமாக ஐம்பதினாயிரம் ரூபா!

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாகக் கசிப்பு உற்பத்தி செய்த குற்றத்திற்காக மூவருக்கு ஐம்பதினாயிரம் ரூபா தண்டப்பணம் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது. உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த ஒருவருக்கு 30,000 ரூபா தண்டப்பணமும், 5,000 ரூபா தர்மப்பணமும் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த ஒருவருக்கு 10,000 ரூபா தண்டப்பணமும், 2,000 ரூபா தர்மப்பணமும் விதிக்கப்பட்டது. தர்மப்பணங்களை இருபாலை கானான் சிறுவர் இல்லத்திற்கு வழங்கும் படியும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பதத்திரமின்றி அரச அனுமதி பெற்ற சாராய வகையை விற்பனை செய்த குற்றத்திற்காக நான்கு பேருக்கு 10,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஒருவருக்கு 2,000 ரூபா தண்டமும், 2,000 ரூபா தர்மப்பணமும் விதிக்கப்பட்டது. கோப்பாய் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு 2,000 ரூபா தண்டமும், 2,000 ரூபா தர்மப்பணமும் விதிக்கப்பட்டது. கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த ஒருவருக்கு 4,000 ரூபா தண்டப்பணமும், 2,000 ரூபா தர்மப்பணமும் விதிக்கப்பட்டது. இவர்கள் மூவரும் தமது தர்மப்பணத்தை யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவிற்கு வழங்கும்படி உத்தரவிடப்பட்டது. இணுவிலைச் சேர்ந்த ஒருவருக்கு 4,000 ரூபா தண்டப்பணமும், 2,000 ரூபா தர்மப்பணமும் விதிக்கப்பட்டது. இவர் தனது தர்மப்பணத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கும் உளநல சங்கத்திற்கு வழங்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பொற்பதி வீதி கொக்குவிலைச் சேர்ந்த ஒருவருக்கு சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்தமைக்காக ஆறுமாத கடுழீயச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

நிறைஞ்சனாஸ் சங்கானை

அஜீத், லைலா நடித்த

தீனா

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

ULTRA FORCE- 2

(சி-1425)

ராஜா யாழ்ப்பாணம்.

சத்தியராஜ், விஜயலட்சுமி, பாண்டிராஜன் நடித்த

ராமச்சந்திரா

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

(சி-1424)

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## ஆதனவரி அறிவித்தல் - 2003

2003 ஆம் ஆண்டு மூன்றாம் கந்தாயத்துக்கான ஆதனவரியை 30.09.2003 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமுமின்றி இந்த அலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ் விபரப்படி வெலியாற்றுப்பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகிறேன்.

| | |
|---|---|
| வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் | - 15% |
| ஏனைய காணிகள் | - 20% |

நிலுவை உட்பட 2003 ஆம் ஆண்டிற்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் மாநகரசபையின் கட்டளைச் சட்டம், அத்தியாயம் 252, பிரிவு 252 இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகிறேன்.

காசோலையாக செலுத்துவோர் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இ. இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(சி-1596)

# இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு சுவிற்ஸர்லாந்து ஒத்துழைப்பு வழங்கும்

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூகக் கட்டமைப்புக்களைப் பாதிக்கச் செய்த - இருபது வருட கால கொடூர யுத்தத்தை நிறுத்தி, நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவும் - வழ்ச்சியுற்ற பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பவும், வளமானதோர் தேசத்தை நிர்மாணிக்கவும் - பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துச்செல்லும் - செயற்திட்டங்கள் சுவிற்ஸர்லாந்து அரசாங்கத்தினது- பாராட்டிற்கும், கவனத்திற்கும் உட்படுவதாக அந்தநாட்டின் வெளிநாட்டு அமைச்சர் மிசெலின் தெல்மிரே குறிப்பிட்டுள்ளார்.

நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில், பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சமாதான முன்னெடுப்புக்களின் தற்போதைய வளர்ச்சிப் போக்கினையும், தடங்கள்கள் பற்றியும், பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க - சுவிற்ஸர்லாந்து வெளிநாட்டு அமைச்சருக்கு விளக்கியுள்ளார்.

இலங்கையின் சமாதான முன்னெடுப்பிற்கும், இலங்கையை மீட்டெடுத்தல் செயற்திட்டத்திற்கும் - தமது பூரண ஒத்துழைப்பினைச் சுவிற்ஸர்லாந்து அரசு ஒத்துழைப்பு வழங்குமென, அந்தநாட்டு வெளிநாட்டமைச்சர் மிசெலின் தெல்மிரே தெரிவித்துள்ளார்.

# வடக்கு- கிழக்கு பாதுகாப்பு தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும்

வடக்கு - கிழக்கு மாகாண பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பான விவாதம், அடுத்த மாதம் நடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற எதிர்கட்சிக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளதாக, கட்சிக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப் பட்டதையடுத்து, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

# ஊடகங்களின் தவறான கருத்துகள்; படையினர் பாதிக்கப்படுகின்றனராம்!

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள சில ஊடகங்கள்- இராணுவத்தினரைப் பற்றித் தவறான கருத்துக்களை வெளியிட்டு வருவதால், அவர்கள் மனமுடைந்துள்ளதாக, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பணிப்பில் பேரில், திருகோணமலைக்குச் சென்றிருந்த எதிர்க்கட்சித் தலைவர், அங்குள்ள இராணுவத்தினர் தொடர்பாகக் கருத்துக்களைத் தெரிவித்தபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் 'வில்லம் வெகர' என்ற சிங்களக் கிராமத்தில் மக்கள் மீளக்குடிமயர்ந்து வருகின்ற போதிலும், அவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஏற்படுத்தப் படவில்லை. இதனால், அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த மகிந்த ராஜபக்ஷ, இந்த விடயம் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை எனவும் குற்றஞ்சாட்டினார்.

# ஹன்சார்ட் அறிக்கைகள் கழிவுக் கடதாசிகளாக விற்பனை

நாடாளுமன்ற ஹன்சார்ட் அறிக்கைகள் - கழிவுக் கடதாசிகளாக விற்பனை செய்யப்படுவதாக, அரசு மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டை நாடாளுமன்ற விவகார அமைச்சர் எ.எச்.எம். அஸ்வர் சுமத்தியுள்ளார்.

ஹன்சார்ட் அறிக்கைகள் காலம் காலமாகப் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டிய சொத்துக்கள். அவற்றைக் கழிவுப் பொருளாக நினைத்து, விற்பனை செய்வது கவலை தரும் விடயமாகும். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுவது மிகவும் அவசியமானதாகும் எனவும் அஸ்வர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில். இடம்பெறும் உறுப்பினர்களின் உரைகள் உட்பட, முக்கியமான நிகழ்வுகள் இந்த ஹன்சார்ட் அறிக்கைகளில் பதிவு செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்த அறிக்கைத்தாள்களே கழிவு கடதாசிகளாக விற்பனை செய்யப் படுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## நவம்பர் மாத நடுப்பகுதியில்

# அடுத்த வரவு-செலவுத்திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

அடுத்த வருடத்திற்கான வரவு- செலவுத் திட்டம் - நவம்பர் மாதம் 12 ஆம் திகதி 2 மணிக்கு நிதியமைச்சர் கே.என்.சொக்ஸியினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வரவு - செலவுத் திட்டத்துக்கான விவாதங்கள் 7 நாட்கள் இடம்பெறும் என்றும், இந்த விவாதம் 13 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதிவரை இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.







நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வின் போதான சில காட்சிகளை மேலுள்ள படங்களில் காணலாம்.

## இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில்

# பொருளாதார தொடர்பை விரிவுபடுத்த இந்திய-இலங்கை பிரதமர்கள் பேச்சு!

இங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையே பொருளாதார தொடர்புகளை விரிவுபடுத்துவதற்கான துரித செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென, இரு நாட்டு பிரதமர்களும் கருத்து தெரிவித்தனர்.

நியூயோர்க்கிலுள்ள - பெலஸ் ஹோட்டலில் இந்தியப் பிரதம மந்திரி அடல் பிஹாரி வாஜ்பாயையும், இலங்கைப் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் நடந்த கலந்துரையாடலின்போது, இந்திய- இலங்கை பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கை பற்றியும் நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது.

இந்த உடன்படிக்கைக்குத் தேவையான முதற்கட்ட அறிக்கையை, தயாரிப்பதற்காக, இரு தரப்பினரும் செயற்குழுக்கள் இரண்டினை நியமித்துள்ளதுடன் - இந்தச் செயற்குழுவினால் தயாரிக்கப்படும் அடிப்படை அறிக்கையை, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் - இலங்கைப் பிரதம மந்திரி - இந்திய பயணத்தின்போது வழங்குவார் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த அறிக்கையை நோக்காகக் கொண்டு, இந்திய - இலங்கை பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கையைத் தயாரிப்பதற்கான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்திய வெளிநாட்டு அமைச்சர் ஜஸ்வந்த் சிங்கும், இலங்கை பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொடவும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## பொலிஸ் அணிவகுப்பில் கண்ணீர் புகைக்குண்டு வெடித்தது

நுவரெலியாவில் நடைபெற்ற பொலிஸ் அணிவகுப்பில், வர்ண நிறக்குண்டுகள் ஏவப்பட்டபோது, தவறுதலாக வெடித்த கண்ணீர்ப்புகைக் குண்டினால் அவ்விடத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு நடத்தப்பட்ட அணிவகுப்பு மரியாதையின்போதே, இவ்வாறு வர்ணக்குண்டுகள் வெடிக்கவைக்கப் பட்டன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் பீதியடைந்து உடனடியாக அவ்விடத்தைவிட்டு வெளியேறியுள்ளனர்.

பொலிஸாரின் தவறுதலே இவ்வாறு நடைபெறுவதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

# குரங்குப்பாஞ்சான் மீள்குடியமர்வு தொடர்பாக கிண்ணியா பிரதேச செயலகத்தில் கூட்டம்

(திருகோணமலை)

திருகோணமலையிலுள்ள- குரங்குப்பாஞ்சான் பகுதியில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாகவும், அந்தப் பகுதியில் நெற்செய்கையை மேற்கொள்வது தொடர்பாகவும், கூட்டமொன்று நடைபெற்றது.

திருகோணமலை - கிண்ணியா பிரதேச செயலர் பிரிவில், மாவட்ட செயலர் எச்.பி.றொட்றிகோ தலைமையில் இந்தக்கூட்டம் நடைபெற்றது.

1985 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தப் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து வாழ்கின்றபோதும், தற்போது இது இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசம் என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன், இந்தக் கூட்டம் விடுதலைப் புலிகளின் சம்மதத்துடன் நடத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (04)

## இந்தியாவிலிருந்து

# மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு ஊழியர்களை அழைக்க ஆலோசனை!

இந்தியாவிலிருந்து - மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு சுகாதார ஊழியர்களைத் தருவிக்க, அமைச்சர் தயாரத்ன பேச்சு ஒன்றினை நடத்தியுள்ளார்.

சுகாதார சேவையிலுள்ள ஊழியர்கள் நடத்தி வருகின்ற தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்தில்- நாட்டிலுள்ள வைத்தியசாலைகள் அனைத்தும் சீராக இயங்க முடியாதவொருநிலை தற்போது காணப்படுகிறது.

இந்த நிலையில், மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் கதிரியக்கப் பிரிவு செயலிழந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

கதிரியக்கப் பிரிவினைச் செயற்படுத்தும் வகையில் - அமைச்சர் தயாரத்ன - இந்தியத் தூதுவராலயத்துடன் தொடர்புகொண்டு பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தியத் தூதுவர் நிருபம் சென்னிடம், அமைச்சர் தயாரத்ன நடத்திய பேச்சுவார்த்தைகளால் - இந்தியாவிலிருந்து கதிரியக்கப் பிரிவினை இயக்கும் தொழிலாளர்கள் வரவழைக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால், பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல்

பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் சார்பில் தனியான பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளவேண்டுமெனவும், இது தொடர்பாக வடக்கு - கிழக்கு முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் - நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசியினை அவரது இல்லத்தில் சந்தித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது இது தொடர்பாக நாடாளுமன்றில் விவாதமொன்றினை நடத்தவேண்டுமென இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சர் ரவூப் ஹக்கீம் கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஜே.வி.பியுடனான கூட்டணி தொடர்பாக மீளவும் ஜனாதிபதி சந்திரிகா ஆராய்வு!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையில் மீண்டும் கூட்டணி அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி ஆராய்ந்து வருகிறார்.

இரு கட்சிகளும் கூட்டணி அமைத்தலில் ஏற்படும் சிக்கல்கள் குறித்து ஆராய்வதற்காக, ஜனாதிபதி - சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவை நியமித்துள்ளார்.

ஜே.வி.பிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையில் கூட்டணி அமைக்கும் முயற்சிகள் நடைபெற்ற போதிலும், இரு கட்சிகளுக்கும் இடையில் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதில் உடன்பாடு எட்டப்படாத நிலையில் முறிவடைந்தது.

இந்த நிலையில் மீண்டும் இரு கட்சிகளுக்கும் இடையில் கூட்டணி அமைக்க வேண்டும் என, ஜனாதிபதி - அரசியல் கட்சித் தலைவர்களுடன் ஆராய்ந்து வருகிறார்.

இதனடிப்படையில், சுதந்திரக் கட்சி செயலாளரை இரு கட்சிகளுக்கிடையில் கூட்டணி அமைப்பதில் ஏற்படும் சிக்கலான அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளல் போன்ற விடயங்கள் குறித்து, ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு, ஜனாதிபதி - மைத்திரிபால சிறிசேனவைப் பணித்துள்ளார். (01)

# கிளிநொச்சியை நவீன நகரமாக்க மக்கள் ஒத்துழைக்க வேண்டும்!

## அரச அதிபர் இராசநாயகம் தெரிவிப்பு

கிளிநொச்சி நகரத்தை நவீன நகரமாகக் கட்டியெழுப்புவதற்கு, பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் கே.இராசநாயகம் - பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நகரை புதிய திட்டமிடலுக்கு ஏற்ப அமைப்பது தொடர்பாக, அரச அதிபர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையின் முழு விபரம் வருமாறு -

எமது மாவட்டத்தினை திட்டமிட்ட வகையில் - நவீன நகரமாகக் கட்டியெழுப்ப சகலரது ஒத்துழைப்புடன், கிளிநொச்சி மாவட்ட நகர திட்டமிடல் குழு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்த நகரத் திட்டமிடல் தொடர்பில் - கட்டடங்களது வரைபடங்களைச் சமர்ப்பித்து, நகரத் திட்டமிடலுக்கேற்ப - அனுமதித்த கட்டடங்களையும், வீதிகளையும் கட்டுமாறும், பேணுமாறும் கரைச்சி பிரதேச சபையின் விசேட ஆணையாளர், செயலாளர் ஆகியோர் கடந்த மூன்று வருடங்களாக பகிரங்க அறிவித்தல் மூலம் பொது மக்களைக் கோரிவருகின்றனர்.

ஒரு சில பொதுமக்களும், நிறுவனங்களும்- இந்த வேண்டுகோளுக்கு செவிமடுக்காது, தாங்கள் நினைத்ததைப்போல் கட்டடங்களைக் கட்டிவருவதனை, நகரத் திட்ட அபிவிருத்திக்குழு அவதானித்துள்ளது. இது தொடர்பில், அவ்வாறான கட்டடங்களை இடித்து அழிப்பது உட்பட ஆகக்கூடிய கடுமையான நடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

எனவே, கரைச்சி பிரதேசசபை உட்பட அனைத்து கிளிநொச்சி மாவட்ட பிரதேசசபைகளினதும் எழுத்துமூல அனுமதி பெறாது அமைக்கப்படும் - கட்டடங்களுக்கும் எந்தவித நட்டஈடு கோரமுடியாது என்பதுடன், இவை அழிக்கப்படும் எனவும் அறியத்தருகிறேன்.

ஆகவே, கடுமையான நட்வடிக்கையெடுக்க முன்பு கட்ட உரிமையாளர் தாங்களாகவே சட்டப்படியான வரையறைக்குள் கட்டடங்களைத் திருத்திக்கட்டி, பிரதேச சபைகளின் அனுமதியைப் பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், பெருமளவு பொதுமக்களும், நிறுவனங்களும் அரச ஒதுக்கீடான புகைவண்டிப் பாதைகள், மைதானங்கள், தெருவோர ஒதுக்கீடுகள், வாய்க்கால்களின் ஒதுக்கீடுகள் அரச நிறுவனங்களுக்கான ஒதுக்கீடுகள் போன்றவற்றைப் பிடித்து ஆட்சிசெய்து, கட்டடங்களை நிர்மாணித்து, நிரந்தரப் பயிர்களை சட்ட வீரோதமாக நாட்டியும் வருகின்றனர். இவ்வாறான காணிகளில் இருந்து, சகலரும் உடனடியாக வெளியேற வேண்டுமென- இத்தால் அறிவிக்கப் படுகிறது. அத்துடன், அரசினால் நீண்டகாலக் குத்தகைக்கு கொடுக்கப் பட்ட காணிகளைப் பலர் உறுதி எழுதி விற்று வரும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது. காணிச்சட்டத்தின் கீழ், விவசாய நட்வடிக்கைக்கு பெற்ற காணிகளை இரத்த உறவினர்களுக்குக் கொடுக்காது; வேறு நபருக்கு பணத்திற்கு விற்றுவரும் நடவடிக் கைகளையும் உடன் நிறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன், காணிகளை விலைக்கு வாங்குவோருக்கு- மாற்றிக்கொடுக்க எந்தச் சட்ட ஏற்பாடும் இல்லை. மேற்படி விடயம் தொடர்பில், இது இறுதி அறிவித்தலாகும். எனவே, நகர அபிவிருத்தித் திட்டத் திற்கிணங்க - சகலரும் தங்களது செயற்பாட்டினை முன்னெடுத்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என, அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செபமாலை அன்னை ஆலய திருப்பலி!

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்த பெருவிழா, நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

பிற்பகல் 4.30 மணிக்கு பாஷையூர் - புனித அந்தோனியார் ஆலயத்திலிருந்து செபமாலை பேரணி ஆரம்பமாகி, செபமாலை மாதா ஆலயத்தை வந்தடைந்தததைத் தொடர்ந்,து நவநாள் திருப்பலி ஆரம்பமாகும்.

மேற்படி பெருவிழாவில்- நவநாள் திருப்பலி தினமும், மாலை 5.30 மணிக்கும் நற்கருணை வழிபாடு 4.10.2003 சனி மாலை 5.30 மணிக்கும், திருநாள் திருப்பலி 5.10.2003 ஞாயிறு காலை 7 மணிக்கும் நடைபெறும். திருப்பவனியின் பின் அன்னையின் தேர்ப்பவனியும் இடம் பெறும்.

# அலம்பில் பிரதேசத்தில் சமாதான பாசறை நிகழ்வு

யாழ்.திருமலைக் கலாமன்ற அங்கத்தவர்களும், முல்லைத்தீவு திருமறைக் கலாமன்ற அங்கத்தவர்களும் இணைந்து - அலம்பில் பகுதியில் சமாதான பாசறை நிகழ்வு நடாத்தவுள்ளனர்.

இந்த நிகழ்வானது எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பங்கு கொள்வதற்காக - யாழ்.திருமறைக் கலாமன்ற அங்கத்தவர்கள், இன்று யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு புறப்படுகின்றனர். இளைஞர் யுவதிகளுக்கிடையில் சமாதான விழிப்புணர்வுடன் புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதற்காகவே, இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. (91)





மாவீரர்கள் நினைவாக வடமராட்சி மாவீரர் துயிலும் இல்ல புனரமைப்பு குழு நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் பங்கு பற்றிய கிளிநொச்சி அணியினருக்கு தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா கைலாகு கொடுப்பதை முதற்படத்திலும், கனேடிய தமிழர் புனர் வாழ்வுக் கழக ஆதரவுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடத்திய இலவச கணினிப் பயிற்சிநெறியின் இரண்டாவது பிரிவில் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களை இரண்டாவது படத்தில் காணலாம்.

## வெள்ளிக்கிழமையில் மகப்பேற்று பரிசோதனை

(யாழ்பாணம்)

இடைக்காடு - மகப்பேற்று வைத்தியசாலையில், பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெற்றுவந்த மகபேற்று தொடர்பான வைத்தியசேவை, இனிவரும் நாட்களில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## புலமைப் பரிசில் பரீட்சை கருத்தரங்கு

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான - இலவச கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. யாழ்.கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கை - மேல்மாகாண கல்வி ஆலோசகர் த.அம்பிகைபாகன் நடாத்தவுள்ளார். இரு தினங்கள் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கு, நாளை கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## குறுந்தூரஓட்டத்தில் தேசிய மட்டத்தில் தெரிவு

(சுதுமலை)

மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி, 100 மீற்றர் குறுந்தூர ஓட்டப் போட்டியில் - தேசிய ரீதியில் பங்கொள்வதற்காக, கொழும்பு செல்லவுள்ளார்.

செல்வி. சுபாஜினி ரவீந்தீரன் (வயது 21) என்பவரே இவ்வாறு கொழும்பு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)

## சிரமதானப்பணி

(யாழ்ப்பாணம்)

கியுடெக் நிறுவனத்தின் உயிர் பூட்டல் குழுவினரால், சிரமதானப் பணி நாளைமறுதினம் வெற்றிலைக் கேணியில் இடம்பெறவுள்ளது. உயிர்பூட்டல் குழுவும், அந்த பகுதி மக்களும் இணைந்து - வெற்றிலைக் கேணி புனித அந்தோனியார் கோவிலுக்கு முன்பாக பாழடைந்த நிலையிலுள்ள நூல்நிலையத்தையும், அதனை அண்டிய இடத்தையும் - துப்பரவு செய்யவுள்ளனர். இதன் பின் புதிய சனசமூக நிலையம் ஒன்று கியுடெக் நிறுவனத்தால் நிறுவப்படவுள்ளது. (91)

## ஆட்டோ விபத்தில் முதியவர் காயம்!

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் - ஆட்டோ விபத்தில் படுகாயமடைந்த நிலையில் முதியவர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமாலை ஆனைக்கோட்டைச் சந்திக்கு அண்மையில் இடம் பெற்ற இந்த விபத்தில், அதேயிடத்தைச் சேர்ந்த எஸ்.சாம்பசிவம் (வயது 65) என்பவரே படுகாயமடைந்த நிலையில் வைத்திய சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்

பெயர் : ம.அபினா
முகவரி :கோவிற்புலம், தெல்லிப்பளை.



இரண்டாவது அகவையில்



பெயர் : பா.பிரவீனசர்மா
முகவரி :22, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

ஐந்தாவது அகவையில்

பெயர் : ச.நிலக்ஷி
முகவரி :இமையாணன் வடக்கு, உடுப்பிட்டி.



ஏழாவது அகவையில்



பெயர் : ஜெ.நிசாங்கன்
முகவரி :இணுவில் கிழக்கு இணுவில்.

எட்டாவது அகவையில்

பெயர் : வி.சுதாகர்
முகவரி: வண்ணார்பண்ணை.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-------------------------
பெற்றார் ஒப்பம்



# கர்நாடக இசையுடன்



இசை ஆசிரியை
விக்டர் வடிவாம்பிகை

இராமநாதன் நுண்கலைக்கழக நடனத்துறையில் இசைத்துறை விரிவுரையாளராகவுள்ளார் செல்வி விக்டர் வடிவாம்பிகை. இவர் நுண்கலைமாணி, இசை, பண்ணிசையில் கலாவித்தகர் போன்ற பல பட்டங்களைப் பெற்று, குறுகியகாலத்தில் இசைத்துறையில் தனக்கென ஒரு தனி இடத்தை கொண்டுள்ள, வளர்ந்துவரும் இளம் இசைக் கலைஞருடனான சந்திப்பு

யாழ்ப்பாணம் - வைமன் வீதியினால் பயணித்துக்கொண்டிருக்கிறேன். முன்னர் ஈழநாதம் பணிமனை அமைந்த பழைய இடத்திற்கு அருகிலுள்ள ஒழுங்கையால் எனது பயணம் தொடர்கிறது. அந்த ஒழுங்கை - இசை ஆசிரியை வடிவாம்பிகையின் வீட்டுடன் முடிவடைகிறது. முன்னைய அறிமுகத்தினால், இலகுவாக என்னை இனம்கண்டு, இன்முகத்துடன் வரவேற்கிறார்.

அமைதியான சூழலில் அமைந்த அவரது வீட்டிலிருந்து, அவருடனான செவ்வியை நான் ஆரம்பிக்க ஆயத்தமானவேளையில், சுவையான தேநீர் இடைமறித்தது. அதனைப் பருகிவிட்டு, நாம் உரையாடலை ஆரம்பித்தோம்.

**இசைத்துறையின் பிரவேசம் பற்றிக்கூற முடியுமா?**

என்றபோது, நான் எனது ஏழாவது வயதில் தெல்லிப்பளையில் அமைந்துள்ள துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில், சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியிடம் - குடும்பத்தவரால் ஒப்படைக்கப்பட்டேன். அன்றிலிருந்து தேவாரம், திருவாசகம், கூட்டுப் பிரார்த்தனை என அங்குள்ள ஒன்பது சிறுவர்களுடன், நானும் இணைந்து கொண்டேன். அன்பான அரவணைப்பும், கண்டிப்பான நெறிமுறையும் என்னைத் தெய்வீகச் சூழலில் இணைத்து, நல்லதொரு பிரஜையாக வளரவைத்தது.

எனது 12 ஆவது வயதிலிருந்து சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியுடன், அவரது சொற்பொழிவுகளில் பங்குகொள்வேன். சொற்பொழிவுகளின் தொடக்கத்திலோ, முடிவிலோ திருவாசகப் பாடல்களைப் பாடும் புண்ணியபேற்றைப் பெற்றேன். என்னிடமுள்ள குருபக்தியின் பயனாக, தகுதியான குருவுடன் இணைந்து, எனது இசைப் பயணத்தைத் தொடக்கி, இன்று பல மாணவர்களுக்குக் குருவாக உள்ளேன் என, தனது இளமை நினைவுகளை நினைவுகூர்ந்த ஆசிரியை வடிவாம்பிகையிடம் -

**தங்களது குறுகியகால வளர்ச்சி பற்றி கூறமுடியுமா?** என வினாவிய போது,

சிறுவயதில் இருந்தே மேடையில் தோன்றுவதால் பலரது பாராட்டுதல்களும், ஊக்குவிப்பும், அறிமுகமும் கிடைத்தது. அத்தோடு, எனது குருவின் தாராள, அகல விரிந்த கல்விமுறை, எனது உயர் கல்வியிலும், மேல்நிலைக் கல்வியிலும் நான் பல போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிபெற வழிவகுத்தது. "திருவாசகத்திற்கு உருகாதோர் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பார்கள் பெரியோர்கள். அந்தவகையில், எனது திருவாசகத்தை இரசிப்பதற்கு என்றே தனியானதொரு கூட்டம் இருக்கிறது. ஆனாலும், இவற்றிற்கு மேலாக எனது எல்லா செயற்பாடுகளிலும் முழுமையான பங்களிப்பை நல்கிவரும் சிவத்தமிழ் செல்வியின் ஆசியே, எனது வளர்ச்சிக்குக் காரணம் எனக் கூறி, தனது குருபக்தியை வெளிப்படுத்தினார்.

**இசைத்துறையில் நீங்கள் சாதிக்க நினைப்பது** என ஆரம்பித்தவுடனேயே முந்திக்கொண்டு, நிறையவே சாதிக்கவேண்டும் எனும் எண்ணம் உள்ளது. அதிலும், இந்தியா சென்று கர்நாடக இசையிலும், பண்ணிசையிலும் முழுமையான புலமை பெற எண்ணியுள்ளேன். அத்துடன், துர்க்கை அம்மனின் பெயரில் ஒலிப்பேழை ஒன்றையும் வெளியிடத் தீர்மானித்துள்ளேன். நான் வளர்ந்த சூழலில் வளர்ந்துவரும் மாணவர்களுக்கு, இசைப் பயிற்சியை இலவசமாக அளிக்கவுள்ளேன், எனத் தனது உள்ளக்கிடக்கையை உணர்ச்சிபூர்வமாக வெளிப்படுத்தினார். அவரை ஒரு தரம் பாராட்டிக்கொள்ள மனம் துடித்தது.

சற்று செவ்வியைத் திசை திருப்பும் நோக்கில், **கர்நாடக இசையில் மேலைத்தேய இசையின் தாக்கம் பற்றி என்ன நினைக்கிறீர்கள** என வினாவியபோது, சற்று உசாரானார். அழகிற்காகவோ அல்லது ஆடம்பர நோக்கிலோ - சினிமாவிலும் சரி, பாடசாலை போட்டிகளிலும் சரி - கிந்துஸ்தான், மேலைத்தேசம், கர்நாடகம் என ஒரு இசைக் கலவையைப் புகுத்திவருவதைக் காணமுடிகிறது. இந்தநிலையைக் கட்டாயம் இல்லாமல் செய்யவேண்டும். எதுவானாலும் தனியே, தனது பாணியில் வரும் போதுதான், உண்மை அழகைப் பெறுகிறது. இந்த இசைகளும் அவ்வாறே அமையவேண்டும். பாவ சொற்கட்டுக்களை, உருப்படிகளை எப்போதும் பழைய மரபை தழுவியதாகவே அமைக்கவேண்டும். வர்ண சுரத்திற்கு ஏற்பவே சாகித்தியம் அமையவேண்டும் எனக் கூறியவர், தனது இனிமையான குரலில் வர்ண சுர அமைப்புக்களைப் பாடிக்காட்டினார். கேட்போர் மனதை நெகிழவைக்கக்கூடிய அந்த இசையை மறக்கவேமுடியாது. **இசை உலகில் தோற் கருவிகளின் பங்களிப்பு** பற்றிக் கேட்டபோது, சிறுபுன்முறுவலுடன் தனது கருத்தைச் சற்றுக் காரமாக வெளிக் கொணர்ந்தார்.





இசைக் கச்சேரியில் வடிவாம்பிகை

கச்சேரிகளை மெரு கூட்டுவதற்காகவே இநதக் கருவிகள் பயனபடுகிறது. தபேலாவின் நாதம் வேறாகவும், மிருதங்கத்தின் நாதம் வேறாகவும் அமைகிறது. எமது பாரம் பரிய இசைக்கருவியான பறை -இப்பொழுது அருகிவிட்டது. இதேபோல, தவிலும் ஒரு காலத்தில் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதை ஏன் சொல்கிறேன் என்றால் - தற்போது கோயில்களில் தாள அமைவுகளைக் இயந்திரத்தினுட்புகுத்தி, (பறை, தவில், தாளம்) அவற்றைத் தமது தேவைகளிற்குப் பயன்படுத்துகிறார்கள். தனியே தோற்கருவி மட்டுமன்றி, துளைக்கருவி, நரம்புக்கருவி இவைகளின் பூரண பங்களிப்பே, செவிக்கு இன்பமான இசையை வழங்கும். இவை படிப்படியாக குறைந்து வருவது பெரும் மனவருத்தத்திற்குரியது என, தனது .கருத்தை மன வேதனையோடு வெளிப்படுத்தினார்.

**உங்களது இசைத்துறையின் குரு பற்றிக்கூற நினைப்பது யாது?** என்று வினாவை முடித்தவுடன், மீண்டும் பழைய மலர்ச்சியும், உற்சாகமும் வருகிறது. தொடர்ந்தார் தனது உரையாடலை. எனது குரு திருமதி தர்மபூபதி சிதம்பரநாதன். இவர், ஓய்வுபெற்ற இசைத்துறை விரிவுரையாளர். பின்னர், ஓய்வுபெற்ற கல்வி பணிப்பாளரான க.கணபதிப்பிள்ளையிடம் கற்றேன். இவர்கள் எனக்கு குருவாகக் கிடைத்தமை நான் செய்த பெரும் தவப்பயன் என்றே கூறுவேன் என்று முடித்தவரிடம் -

## பண்ணிசையும் வளர்க்கப்படவேண்டும்

இசை நிகழ்வுகளிலே அணி செய் கலைஞர்களின் பங்களிப்பு பற்றிக் கேட்டபோது, பக்கவாத்தியக் கலைஞர்கள் - பாவ, தாள, ஏற்ற, இறக்கங்களுக்கு ஏற்ப வாசிக்கவேண்டும். இதை அனைவரும் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். இசை நிகழ்வு சிறப்பாக அமையவேண்டும் என்றால், வாய்ப்பாட்டு கலைஞன்- வாத்தியக் கலைஞனிடம் தனது பாடலை முன்னரே கூறி, ஒத்துழைப்பு நல்குவது நல்ல முழுமையான கச்சேரியைப் படைக்க வழிகோலும். ஒரு கலைஞன் மேடையிலே விடும் தவறு (தாளம், சுருதி, வர்ண அமைப்பு)- மற்றக் கலைஞரால் - பார்வையாளர்களுக்குத் தெரியாத விதத்தில் சீர் செய்யவேண்டும் என்ற தனது கருத்துடன் ஒரு அறிஞரின் கருத்தாக ஒரு மேடையிலே கொழுவல், தழுவல், நழுவல் - இவை ஒன்றை ஒன்று பேணி வரவேண்டும் என்றார்.

நீங்கள் பெற்றவிருதுகள் பற்றிக் கூறமுடியுமா என்று கேட்டபோது- நிறையவே உள்ளது. நான் மாணவியாக இருந்த காலத்திலே, மாவட்ட மாகாணரீதியில் பல பரிசில்களை, பதக்கங்களைப் பெற்றுள்ளேன். 2001 ஆம் ஆண்டு இளைஞர் விருது, பணணிசைதுறையில் கலாவித்தகர் பட்டம் பெற்றதுடன், பல்கலைக்கழகம் மூலமாக நுண்கலைமாணிப் பட்டமும் பெற்றுள்ளேன் என்றார்.

**இன்றைய கர்நாடக இசையின் நிலை என்ன** என்று வினவிய போது - குருகுலவாசமாக இசை பயின்று, குரு பத்தியுடனும், குருவின் அன்பினாலும் ஒரு தெய்வீக கலையாக இசைக்கலை இருந்து வளர்ந்து வந்துள்ளது. ஆனால், இப்போது அந்த நடைமுறைகளைக் காண்பது அரிதாகவே உள்ளது. ஆசிரியர்களிடம் மாணவர்கள் உள்ளார்ந்த பக்தியுணர்வுடன் இவ்விசையைப் பயிலவேண்டும். ஏனெனில், ஆசிரியரின் நீண்ட நேர, நேரடி அவதானிப்பு -ஏனைய பாடங்களைவிட, கவின் கலைகளில் அதிகம் தேவை. இன்று இசைக்கலை நிறுவன மயமாக கப்பட்டு வளர்ச்சியடைந்துள்ளது. இது வரவேற்கத்தக்க விடயமாகும். இவற்றிலே வட இலங்கை சங்கீத சபையினரின் பணி சிறப்பானது. இன்று பொதுவாக இசைக்கலை- தொழில் நிலைக்கல்வியாக மாறி வருவதனையும் அவதானிக் முடிகிறது எனத் தனது பதிலை நிறைவுசெய்ய,

நாமும் உரையாடலின் இறுதிப் பகுதியாக **இசைத்துறை சார்பாக தாங்கள் வாசகர்களுக்குக் கூறுவது யாது** என வினவியபோது,

எமது இசை முன்னோடிகள் அமைத்த பழைய மரபை மாற்றக் கூடாது. இது இசைக்கான விதியாகும். தமக்கு அது பொருந்த வல்லையென, புதியவற்றைப் புனைதல் அழகல்ல. இது தவிர்க்கப்பட வேண்டும். இசையில் (சாதிக்க) என்னாலும் முடியும் என்ற தன்நம்பிக்கையுடன் முன்வரவேண்டும். இவ்வாறான ஆர்வமே நல்லநிலைக்கு கொணடு வரும். நோயாளிக்கு ஆயுள்வேத வைத்தியம் நோயை குணமாக்கும். ஆனால், பல நாட்கள் செல்லும். ஆங்கில

**காவலூர் விஜேந்திரன்**

மருத்துவம் ஒப்பீட்டு ரீதியில் இலகுவில் குணமாக்கும். இதைப் போலவே, எமது கர்நாடக இசை, பண்ணிசை இவற்றிலிருந்து பெரும்பாலானவர்கள் மேற்கத்தைய இசைக்குச் செல்கிறார்கள். இந்நிலை மாறவேண்டும்.

இசையின தாய் இசை - பண்ணிசையாகும். தமிழ் உருப்படிகளுடன் பண்ணிசையைச் சேர்க்க வேண்டும் என எண்ணுகிறேன். கர்நாடக இசையுடன் பண்ணிசையையும் வளர்க்கவேண்டும் என மிக தெளிவாகத் தனது கருத்துக்களை நிறைவு செய்தார்.

பல பயனான விடயங்களைப் பெற்ற திருப்தியுடன், ஆசிரியையிடமிருந்து விடைபெற்று, சுட்டெரிக்கும் வெயிலில் எனது அலுலகத்தை நோக்கிப் பயணித்தேன்.

# அன்னையின் அரவணைப்பில்



ஒரு தாயின் உறவு எத்தனை மகத்தானது, தியாகங்களின் அடிப்படையிலானது. ஒரு தாயின் அன்பு அவசியமானதும்கூட.

இன்றைய காலகட்டத்தில், ஒரு தாய்க்கும் மகளுக்குமான உறவு எப்படி இருக்கிறது என்றால், பெரும்பாலும் தாய்மார்கள் பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக வேலைகளுக்குப் போகின்றவர்களாக இருக்கிறார்கள். தாய் வீட்டில் இருந்தால் மகள் படிப்பு, டியூசன், தொழில் என்று பெரும் பகுதியை வெளியில் செலவிடுகின்றாள். எனவே, .தாய்க்கும் மகளுக்கும் இடைவெளி அதிகமாக இருக்கிறது.

எனவே, அவள் வெளியில் பலருடன்

## உயர்ச்சி பெறும் பிள்ளை

பழக வாய்ப்பு ஏற்படுகிறது. ஆண்களுடன் பழகும் சந்தர்ப்பங்களில், அதை அவள் தவறாகக் காதல் என்று நினைத்து ஏமாறுவதுண்டு. அவள் தன் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்வது அவளுடைய நண்பியிடம் என்றாலும், எல்லா விடயங்களையும் பகிர்ந்து கொள்வாள் என்று கூறமுடியாது. ஆனால், ஒரு தாயிடம் ஒழிவு மறைவின்றி பகிர்ந்துகொள்ள நினைப்பாள்.

எனவே, நீங்கள் ஒரு வேலைக்குப் போகின்ற தாயாக இருந்தாலும், விடுமுறை நாட்களில் அதிகமான நேரத்தை உங்கள் மகளுடன் செலவிடுங்கள். அவளுடன் மனம் விட்டு பேசுங்கள். பாலியல் விடயங்கள் தொடக்கம், குடும்பப் பொறுப்புக்கள், கடமைகள் என்பவற்றை விளங்கப்படுத்துங்கள். நிலைமாறிய பின் பேசிப்பயனில்லை.

அடுப்பு ஊதும் பெண்ணுக்கு படிப்பு எதற்கு என்ற காலம் போய், படிக்கிற பெண்ணுக்கு அடுப்பு எதற்கு என்ற காலம் வந்துவிடும் போல் இருக்கிறது. சில தாய்மார்கள் படிக்கிறபிள்ளை என்று, சமையலறைப் பக்கமே வரவிடுவதில்லை. ஐயோ சமையலா எனக்குத் தெரியவே தெரியாது என்று சொல்லும் நிலை வந்துவிட்டது.

எவ்வளவு படித்தாலும், கட்டாயம் பெண்களுக்கு வீட்டு வேலை தெரிந்திருக்கவேண்டும். ஏனென்றால் அவளும் ஒரு காலத்தில் குடும்பம், பிள்ளைகள் என்று வாழப் போகின்றவள்தானே....?

ஒரு பிள்ளையின் வாழ்க்கை- ஒரு தாயின் கைகளில்தான் தங்கியிருக்கிறது. தாயைச் சந்தையில் கண்டால், பிள்ளையை வீட்டில் பார்க்கத் தேவையில்லை என்பார்கள்.

(தொடரும்.....)

## பொன்மொழிகள் சில

- ஒரு குழந்தையை நீ அடிப்பதற்கு முன்பு, அந்தக் குற்றத்திற்கு நீயே காரணமாக இருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்.
  (ஆஸ்டின் ஓமான்)
- மலர்ந்த முகம் சாதாரண விருந்தையே அறுசுவை உணவாக்கி விடும்.
  (இங்கிலாந்து பழமொழி)
- தீங்குகளை மணலில் எழுது - நன்மைகளைச் சலவைக் கல்லில் எழுது.
  (பிரான்ஸ் பழமொழி)
- பெண் குழந்தை இல்லாதவனுக்கு அன்பைப்பற்றி அறியமுடியாது.
  (இத்தாலிய பழமொழி)
- மனைவி ஒரு வீணையன்று, வாசித்து முடித்த பின்பு, அதைச் சுவரில் உங்கள் விருப்பப்படி சாத்திவிட முடியாது.
  (ருஷ்யா பழமொழி)

# முன்னேற்றம் பாதையில் பெண்கள்

**பெ**ண்களின் முன்னேற்றம் என்பது தற்போது ஏற்பட்டுள்ள ஒரு திடீர் வளர்ச்சி என்றே கூறலாம். அன்றைய சமூகநிலையையும், இன்றைய பெண்களின் சமூக காலகட்டத்தையும் உற்றுநோக்குகின்றபோது- ஆரம்பம், வளர்ச்சி, வளர்ச்சிப் படிமுறைகள், உச்சம், உச்சக்கட்டம் என்ற ஐந்து கட்டமைப்புக்களை இன்றைய பெண்கள் சமூகமானது கருக்கட்டி வளர்ந்து வருகிறது. ஆரம்பகாலங்களில் பெண்கள் மீது அடக்குமுறை, வன்முறை, மூடநம்பிக்கைகள், சந்தேகம், பாலியல் வன்முறைகள், நேரக்கட்டுப்பாடு, குறுகிய வட்டப் பிரயாணம் (கிராமம்), விதவை என்ற முத்திரை, வேறு பாலார்களுடன் தொடர்பு போன்ற அம்சங்கள் இருந்துள்ளன.

இதைவிட, கல்விநிலையை எடுத்துக்கொண்டால்- ஒரு படிப்பறிவு அற்ற சமூகம், எழுத வாசிக்க முடியாத பெண்கள், தொழில் வாய்ப்புரீதியில் அடிமைத்தொழில் - அதாவது கூலிவேலை செய்யும் பெண்கள். இவ்வாறான கொள்கைகள், செயற்பாடுகள் மூலம், பெண்கள் தலைமைத்துவப் பண்பு என்றால் என்ன என அறியமாட்டாள். பிறரில் தங்கி வாழும் பண்பு, வீட்டுக் கட்டுப்பாடுகள், சமூகக் கட்டுக்கோப்புக்கள் ஆகியவற்றுக்குத் தம்மையிட்டுச் செல்வார்கள். இத்தகைய செயற்பாடுகள் மூலம் உடல்ரீதியான பாதிப்புக்களைவிட, உளரீதியான பிரச்சினைகளையே விரைவில் சந்திக்க நேரிடும். குறிப்பாக அளவு மீறிய பயம், விரைவில் கோபம் கொள்ளுதல், எதிர்காலத்தில் நம்பிக்கையின்மை, வெளிப்பாட்டு உணர்வுகள் - சோகம் கலந்தனவாகக் காணப்படும். வாழ்க்கையில் பிடிப்பில்லை, பொறாமை போன்ற தாக்கங்கள் உணர்வுரீதியாக வெளிப்படும். கட்டாயக் கல்விக்கே பெண்களுக்கு உரிமையில்லை. ஏனெனில், இளவயதில் திருமணம், அதிகம்ாகக் கூறினால் சீதனப்பிரச்சினை, குடும்பத்தின் சுமையைத் தாங்கல் போன்ற விடயங்களைக் கொண்டே திருமணம் என்ற போர்வைக்குள் பெண்ணை உருவமைத்துக் கொண்டனர். குறிப்பாகத் திருமண பந்தத்தில் பெற்றோர் தமக்கு விரும்பிய ஆடவனைத் தெரிவுசெய்தாலும், பிள்ளை- தாய் சொல்லைத் தட்டாது, மனதால் விரும்பாவிட்டாலும், மணம் என்ற போர்வையால், விரும்ப வேண்டியுள்ளது. இன்றைய காலகட்டத்தில் இத்தகைய செயற்பாடுகள் ஓரளவு குறைந்துள்ளது.

பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், போராட்ட சுதந்திரம் போன்ற சுதந்திரங்கள் உண்டு. நகர்ந்து கொண்டிருக்கும் இன்றைய 21 ஆம் நூற்றாண்டில், சமூகக் கட்டமைப்பினை உடைத்து நிற்கின்ற இனமாகப் பெண்ணினம் காணப்படுகிறது. ஆரமபகாலங்களில் பெண் என்றால், இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற அளவுகோல்கள் இருந்தன. குறிப்பாகப் பயந்த சுபாவம், நாற்குணம் பொருந்தியவள், உடையமைப்பு சேலைதான், திருமண பந்தத்திலும் ஆணுக்கு வயது கூடவும், பெண்ணுக்கு வயது குறைவாகவுமே திருமணம் அமைந்தன, தொழில்ரீதியில் வேற்றுமை. இன்று இத்தகைய நிலை ஓரளவு மாறியுள்ளது. குறிப்பாக, வயது வந்த பெண் என்றால், ஆண்களுடன் பேசக்கூடாது, பேசினால் குற்றமும், தண்டனையும். ஒருவனுக்கு ஒருத்தி என்றுதான் அரசியல் சட்டம் கூறுகிறது. ஆனால், ஆண் ஒன்றுக்கு மேற்பட்ட இரண்டு, மூன்று மனைவியரை வைத்துக் கொள்வது இன்று உலக வழக்காக மாறிவிட்டது. கணவனை இழந்த பெண் என்றால், அவளுக்கு மறுமணம் அங்கீகரிக்கப்படவில்லை. பல்வேறு முறையிலான பெயர்களை சமூகம் ஏற்படுத்திக்கொண்டது. விதவை, துணையிழந்தவள், வாழ்விழந்தவள் போன்ற பெயர்களை இவள் விரும்பியோ விரும்பாமலோ ஏற்கவேண்டியே உள்ளது. விதவை என்றரீதியில் சுபகாரியங்களுக்கு முன்நிற்கக்கூடாது. அவருடைய கருத்துக்களை ஏற்கமாட்டார்கள். வித்தியாசமான கண்கொண்டுதான் அவளை உற்றுநோக்குவார்கள். இத்தகைய கட்டுப்பாடுகளை அக்காலசமூகம் ஏற்படுத்தியுள்ளது. அன்றைய காலகட்டத்தில் இப்படியான ஒரு சமுதாயம் - வாழ்க்கை என்னும் சக்கரத்தை ஒட்டியுள்ளது என்பதை நினைத்துப் பார்க்கும்போது, உள்ளம் விம்முகின்றது. இவற்றை மனம்கொண்டு இன்றைய காலங்களில், கல்வி என்ற கழகத்திலும், பாடசாலையிலும், தேசிய மட்டத்திலும் நூற்றுக்கு தொண்ணூறு வீதம் பெண்கள்தான் கல்வி கற்பதில் ஆர்வமாய் உள்ளார்கள். உயர் மட்டப் பதவிகளை உற்றுநோக்கினால், தமிழ்நாட்டு முதலமைச்சராக ஜெயலலிதா, இலங்கை ஜனாதிபதியாக சந்திரிகா, இலங்கையின் முன்னைநாள் பிரதமர் அமரர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மற்றும் இந்திராகாந்தி, சோனியாகாந்தி ... என்று பட்டியல் போட்டுக்கொண்டே செல்லலாம். விஞ்ஞான வளர்ச்சியில் கல்பனா ஷாகரும், விளையாட்டு நிலையில் இலங்கையின் சிறந்த ஓட்ட வீராங்கனைகளாக சுசந்திகா ஜெயசிங்க, தயமந்தி தர்ஷா, சிறியானி குலவன்ச போன்றோரைப் பெண்களின் விளையாட்டுத்திறமைக்கு ஓர் வழிகாட்டிகளாகவும், அத்துடன், இன்று தமிழீழ வலைப்பந்தாட்ட அணியும், ஐக்கிய இராச்சியத்திற்குச் சென்று ஒரு புதியதொரு சாதனையை எமது நாட்டுக்குப் பெற்றுத்தந்தது. இவற்றுடன் பல உயர் சாதனைகளையும் பெண்கள் வகித்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.



# மருத்துவ ஆலோசனை

பெண் நோயியல் தொடர்பாக, எமது வாசகர்கள் அனுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்துள்ளார்கள் பெண் நோயியல் வைத்திய நிபுணர்கள் - Dr.G.பவானி மற்றும் Dr.A.கெனத் ஆகியோர்.

**எனக்குத் திருமணமாகி 3 வருடம் ஆகிறது. குழந்தை இல்லை. கடந்த ஒரு வருடமாக மாதவிலக்கு ஏற்படுவதில்லை. அடிக்கடி மார்பிலிருந்து பால்போன்ற திரவம் கசிகின்றது. இது எதனால் ஏற்படுகின்றது?**

மாதவிலக்கின்மை, மார்பிலிருந்து பால் சுரத்தல் போன்ற நிலமைகள் - குருதியில் **Prolaction** என்னும் ஓமோன் அதிகரிப்பினால் ஏற்பட இடமுண்டு. **(Pctinaemia)**. இதற்குக் கபச்சுரப்பியில் ஏற்படும் கட்டி **(Prolactinoma)** காரணமாக அமையலாம். எனவே, நீங்கள் உடனடியாக மருத்துவரை நாடுவதன்மூலம் இதற்குச் சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும்.

**எனக்கு வயது 19. படித்துக்கொண்டிருக்கிறேன். எனக்கு மார்பகங்களின் வளர்ச்சி குறைவாகக் காணப்படுகிறது. இதற்குக் காரணம் என்ன? போதிய வளர்ச்சி ஏற்பட யாது செய்யலாம்?**

பொதுவாக மார்பகங்களின் பருமன் ஆளுக்கு ஆள் வேறுபடுகின்றது. உங்களுக்கு மாதவிலக்கு ஒழுங்காக ஏற்படுமாயின், மார்பகங்களின் அளவு குறித்துக் கவலைகொள்ளத் தேவையில்லை. நீங்கள் மெல்லியவராக இருப்பின், கொழுப்பு மற்றும் மாச்சத்துள்ள உணவுவகைகளை உண்ணலாம்.

**எனக்கு வயது 48, 3 குழந்தைகள் உள்ளனர். இரண்டு மாதங்களாக மாதவிலக்கு விட்டு விட்டு வந்துகொண்டிருக்கின்றது. இது புற்றுநோயின் அறிகுறியாக இருக்குமா? என்ன செய்யலாம்?**

இந்த வயதில் மாதவிலக்கில் ஒழுங்கில்லாத் தன்மை ஏற்படுவது ஒரு பொதுவான நிகழ்வாக இருந்தபோதிலும், 5 வீதமான பெண்களில், இது கருப்பைப் புற்றுநோயாக இருக்கமுடியும். எனவே, நீங்கள் **D+C** எனப்படும் முறைமூலம் இதனை அறிந்துகொள்ள முடியும்.

**எனது மகளுக்கு 4 வயது. ஒவ்வொரு மாதமும் அவளுக்கு மாதவிலக்குப்போல சிறிதளவு இரத்தக்கசிவு ஏற்படுகின்றது. அவள் வயதிற்கு வந்துவிட்டாளா? என்ன செய்வது?**

நான்கு வயதில் மாதவிலக்குப்போல் இரத்தக் கசிவு ஏற்படுவது ஓர் அசாதாரண நிகழ்வாகும். அது ஈஸ்ரோஜன் எனப்படும் ஓமோன் சுரக்கும் கட்டியால் ஏற்பட்டதாகக்கூட இருக்கமுடியும். உடனடியாக மருத்துவரை நாடுவது அவசியம்.

**பெண்நோயியல் சம்பந்தமான பிரச்சினைகள், சந்தேகங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைத்தால், அதற்கான மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படும்.**

சிநேகிதியே
"நமது ஈழநாடு"
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.



# குழந்தை நலம்



## தாய்ப்பால் முதல் — முதலுதவி வரை

### உடைகள்

குழந்தைகளின் உடைகளைப் பொறுத்தவரையில் இவர்கள் குழந்தைகள் தானே, இவர்களுக்குப் பெரிதாக உடைகள்



தேவைப்படப்போகிறதா? என்று கூறிவிடமுடியாது. தாயமாரைக் கேட்டுப்பார்த்தால் தெரியும் - ஒரு நாளைக்கு, குறையாமல் நான்கு, ஐந்து உடைகள் மாற்றுவதற்குத் தேவைப்படுகின்றன எனக் கூறுவார்கள்.

குழந்தைகளுக்கு உடை வாஙகும்போது, சில விடயங்களைக் கவனத்தில் கொள்வது நல்லது. முக்கியமாக, தலைவழியாக அணிந்துகொள்ளும் உடைகளைத் தவிர்ப்பது நல்லது. தலையிலிருந்து கழுத்துப் பகுதியால் கீழ்ப்பகுதிக்கு உடைகள் இறங்குவதற்குள் - குழந்தைக்கு மூச்சு நின்றுவிடுவது போன்றநிலை ஏற்படுகின்றது. குழநதைகளின் உடைகளுக்குப் பின்புறமாக பட்டன் வைப்பதைத் தவிர்த்து விடுங்கள்.

குளிர்காலங்களில் கம்பளித் துணியிலான ஆடைகளைத் தைக்க வேண்டும். அதேபோல், கால்பகுதிகளைக் குளிரிலிருந்து பாதுகாக்க, தகுந்த கால் உறைகளைப் போட்டு விடுங்கள்.

கையில்லா உடைகள் மாரிகாலத்தில் குழந்தைகளுக்குப் பெரும் கஸ்ரத்தைக் கொடுக்கும். இவர்களின் உள்ளாடைகளைப் பொறுத்தவரையில், இடுப்பில் துணியைக் கட்டுவதா? அல்லது இப்போது அனைவரும் குழந்தைகளுக்குப் பயன்படுத்தும் றபர் உள்ளாடைகளைப் பயன்படுத்தலாமா?

பொதுவாகவே பருத்தித்துணியைப் பயன்படுத்துவதால், சில நன்மைகளுண்டு. அதாவது, குழந்தைக்கு இது மிகவும் வசதியாக இருக்கும். மீண்டும் மீண்டும் இதனைப் பாவிக்கலாம். ஆனால், நனையும் ஒவ்வொரு முறையும் இவற்றைத் தோய்த்து சுத்தம் செய்யவேண்டும். மாறாக, றபர் உள்ளாடைகளோ இவ்வாறில்லாமல், பயன்படுத்திவிட்டு அவற்றை எறிந்துவிடலாம். தோய்க்கும் பிரசசினை இல்லை. இலகுவாகக் கழற்றவும் முடிகிறது. ஆனால், இதன்



விலை அதிகம்.

சிலர், றபர் உள்ளாடைகள் நனைந்த பின்பு, நீண்டநேரம் அதை மாற்றாமல் இருக்கிறார்கள். அது தவறு. வெளியே போகும்போது, கழற்றுவதற்கு வழியில்லையென்றால், பரவாயில்லை. ஆனால் நீண்ட நேரம் பாவிப்பதால் குழந்தைக்கு நோய் தொற்றிக்கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது.

குழந்தையின் தோல் மென்மையானது. உள்ளாடையை மாற்றும் ஒவ்வொருமுறையும், குழந்தையின் அடிப்பகுதியை மறக்காமல் சோப் கலந்த தண்ணீரில் துணியினை நனைத்துக் கழுவுதல் வேண்டும். பின்பு ஈரமில்லாத துவாயால் துடைக்கவேண்டும். சுத்தமாக இருப்பதற்காக மட்டுமலல, சொறி, சிரங்கு உண்டாவதற்கு முக்கிய காரணமாக இருக்கும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*முக்காலம் காகம் மூழ்கிக் குளித்தானும் கொக்காகுமா!*

- தமிழ்ப்பழமொழி -

## நமது நோக்கு

# நம்ப முடியாத வாக்குறுதி!

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தற்போது மேற்கொண்டுவரும் சமாதானப் பேச்சுக்கள் ஒன்று போரில் முடியும் அல்லது தனிநாடொன்றை உருவாக்குவதில் முடியும் என்பது ஜனாதிபதி சந்திரிகாவின் தற்போதைய கருத்து என ஜனாதிபதி செயலகப் பேச்சாளரான ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளமையானது, தற்போதைய பேச்சுவார்த்தை முயற்சிகள் குறித்து எந்தவிதமான நம்பிக்கையும் சந்திரிகாவுக்கு இல்லையென்பதைத் தெளிவுபடுத்துவதாகவே உள்ளது.

இது ஒன்றும் ஆச்சரியத்தை ஏற்படுத்தும் விடயமல்ல.

இந்தச் சமாதான நகர்வுகள் எந்தவகையிலும், முன்னேற்றம் காணக்கூடியது என்பதில் மிகவும் ஆழமான அக்கறையுடன் ஆரம்பகாலம் முதலே இயங்கியவர் ஜனாதிபதி சந்திரிகாதான்.

ஆட்சிமாற்றம் போர் நிறுத்தத்துடன் ஆரம்பமான போதே, அதைச் சகித்துக்கொள்ளமுடியாத ஒருவராகத் தான் சந்திரிகா இருந்தார். ஆனால், தோல்வி நிலையில் தனது அதிருப்தியையோ, எதிர்பார்ப்பையோ வெளிப்படையாக, உடனடியாகவோ காட்டக்கூடிய திராணி அவருக்கு அப்போது இருக்கவில்லை.

பின்னர் - புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான போது, அவர் அடைந்த அதிர்ச்சிக்கு அளவில்லை தான்.

தனது ஆட்சிக்காலத்தில், தன்னால் செய்யமுடியாது போய்விட்ட ஒன்றாக அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டமையானது அவர் முற்றிலும் எதிர்பார்க்காத ஒன்றாகும்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகள் ஒவ்வொன்றும் சந்திரிகாவின் இயலாமைக்குச் சவால்விடும் சம்பவங்களாகவே அமைந்தன.

ஏற்கனவே - யுத்தத்தில் தோல்வி, தேர்தலில் தோல்வி, ஆட்சியமைக்கும் முயற்சியில் தோல்வி எனத்தொடர் தோல்விகளைச் சந்தித்த சந்திரிகாவால், ரணிலுக்குக் கிடைத்த தொடர் வெற்றிகளைச் சகித்துக்கொள்ள முடியாமற்போனது இயல்பானதொன்றே .....

இந்தவகையில், ரணிலுக்கு எதிராக எழுந்த வெறுப்புணர்ச்சியின் எதிரொலியே சந்திரிகாவின் சமாதானத்திற்கு எதிரான குரலாக ரூர்க்கம் கொள்ளத்தொடங்கியது.

தனது ஆட்சிக்காலத்தின்போதே சமாதான முயற்சிகளுக்கான ஏற்பாட்டாளராக நோர்வேயை அழைத்தது சந்திரிகாவேதான்.

ஆனால், ஆட்சிமாற்றத்தின் பின்னர், ரணில் பிரதமரானதும் சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள நோர்வே ரணிலோடு தொடங்கியதும் நோர்வேயும் சந்திரிகாவின் வெறுப்புக்கு அதிருப்திக்கும் உரிய ஒன்றாக மாறியதில் வியப்பில்லைத்தான்.

யாழ் - கண்டி வீதி திறக்கப்பட்டதும் தனது அரசியல் எதிர்காலத்துக்கான பாதைகள் ஒவ்வொன்றும் அடுத்தடுத்து மூடப்படுவதாக உணர்ந்த சந்திரிகாவுக்கு - சமாதானத்துக்கும், ரணிலுக்கும் எதிரான இரு முனைத்தாக்குதல் ஒன்றை அரசியல் மூலோபாயரீதியில் வகுத்து மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர் தனது சுயத்தை வெளிப்படுத்த வேண்டியவரானார்.

ஒரு தடவை ஜே.ஆர்.கூறினார், புலிகளைத் தோற்கடிக்க தான் சாத்தானுடன் கூட்டுச்சேரத் தயார் என்று-

அப்போது அவர், இஸ்ரேலுடன் இணக்கப்பாடொன்றுக்கு வந்து கொண்டிருந்தார். அவர் சாத்தான்கள் என ஒருவகையில் இஸ்ரேலைத்தான் குறிப்பிட்டிருந்தார் என அப்போது விமர்சனம் செய்யப்பட்டது.

சில மாதங்களுக்கு முன்னர் - ரணில் அரசைக் கவிழ்க்கும் நோக்குடன் சமாதான நகர்வுகளுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் இலக்குடன், ஜே.வி.பியுடன் கூட்டணி அமைக்கும் நிலைக்குச் சந்திரிகா இணங்கியபோது தனது கணவரைக் கொன்றவர்களுடன் கூட்டணி சேரும் அவரது திட்டம் கடுமையாக விமர்சிக்கப்பட்டபோது, சந்திரிகா - ஜே. ஆர் முன்னர் சொன்ன, அதே வார்த்தைகளையே உச்சரித்தார்.

'நாடு பிரிவதைத் தடுக்க நான் சாத்தான்களுடன் கூட்டுச்சேருவேன' என்ற அவரின் கருத்து நோக்கில் ஜே.வி.பியே சாத்தானாக உணரப்பட்டது.


எதுவானாலும், ஜே.ஆரும் - சந்திரிகாவும் இதன்மூலம் தனது பேரினவாதப் பாரம்பரிய குணாம்சத்தையே வெளிப்படுத்திக்கொண்டனர் என்பது கூறாமலேயே புரியும்.

இந்த அடிப்படையில் சந்திரிகா இன்னமும் 'சமாதானத்திற்கான யுத்தம' என்ற கோட்பாட்டில் இருந்து எள்ளளவும் விலகவில்லை என்பதையே இன்றைய பேச்சுவார்த்தைகள் தொடர்பான அவரது கருத்துநோக்கு வெளிப்படுத்துவதாக உள்ளது.

இன்றைய பேச்சுக்கள் போர் அல்லது தனி நாட்டுக்குத்தான் வழிவகுக்கும் என்று கூறும் அவர் இனப்பிரச்சினைக்கு அதிகாரப்பகிர்வுதான் ஒரே தீர்வு என்று தனது பழைய பல்லவியையே பாடவும் செய்கிறார்.

தனது சொந்த இனத்தைச் சார்ந்தவர்களுடன் 'தனது அளப்பரிய அதிகாரக்குவியலை'ப பகிர்ந்துகொண்டு சமாதான சகவாழ்வு வாழமறுக்கும் சந்திரிகா தமிழ் மக்களுக்கான நியாயபூர்வமான அதிகாரப் பரவலாக்கலை நடைமுறைப்படுத்துவார் என எவரும் நம்பினால் அவர் 'இழிச்சவாய'ராகத்தான் இருக்க வேண்டும்.

## நாடும் நடப்பும்




## ஐரோப்பிய யூனியனின் பயங்கரவாதப் பட்டியலில்

# புலிகளின் பெயர் இல்லாததால் இனவாதிகள் பெரும் ஏமாற்றம்

ஐரோப்பிய யூனியனால் வெளியிடப்பட்ட பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் விடுதலைப் புலிகளின் பெயர் சேர்க்கப்படாமை குறித்து இனவாதிகள் விசனமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய யூனியனின் இந்தப் புதிய பட்டியலில் விடுதலைப் புலிகளின் பெயர் சேர்க்கப்படலாம் என எதிர்பார்ப்புடன் இருந்த இனவாதிகள், இதனால் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர். இம்மாதம் 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்தப் புதிய பட்டியலில், பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய தனிநபர்கள் மற்றும் அமைப்புக்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்தப் புதிய பட்டியலில் ஹமாஸ் அமைப்பின் இராணுவ, மற்றும் அரசியல் பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளபோதும், விடுதலைப்புலிகளின் பெயர் அதில் இடம்பெறவில்லை.

அரசியல் ரீதியான நலன்களுக்காக எக்காரணம் கொண்டும் பயங்கரவாதம் பயன்படுத்தப்படக் கூடாது என்கின்ற நோர்வேயின் நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே, ஐரோப்பிய யூனியனின் இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய அமைப்புக்களின் நிதிச் செயற்பாடுகள், மற்றும் இவ்வமைப்புக்களுக்கு ஆதரவளிக்கும் பிற அமைப்புக்களின் செயற்பாடுகள் யாவும் முடக்கப்பட வேண்டும் என்கின்ற பயங்கவரவாத அமைப்புக்களுக்கு எதிரான இறுக்கமான செயற்பாடுகளும் இதனுள் உள்ளடக்கப்படுகின்றது.

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நபர்கள் மற்றும் அமைப்புக்கள் தொடர்பான இந்த ஐரோப்பிய யூனியனின் புதிய பட்டியல், மிகவும் இறுக்கமான நிலைப்பாடுகளுடன், மிகக் கவனமாகவே தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 12 ஆம் திகதி சந்தித்த ஐரோப்பிய யூனியனின் உறுப்பினர்கள், பயங்கரவாதத்துக்கு எதிரான தமது செயற்பாடுகளுக்கான அடிப்படையாகவுள்ள பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலை கடுமையாகப் பரிசீலித்தே, காலத்துக்கு ஏற்றவகையில் அதனைப் புதுப்பித்திருந்தனர்.

ஆயினும், இதில் விடுதலைப்புலிகளின் பெயர் சேர்க்கப்படாதமையானது, விடுதலைப்புலிகளைப் பயங்கரவாத அமைப்பு என வர்ணித்து வரும் சிங்களப் பேரினவாதிகளுக்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப்புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா, இந்தியா, பிரித்தானியா ஆகிய நாடுகள் பிரசாரம் செய்து வரும் நிலையில், ஐரோப்பிய யூனியனின் இந்தப் புதிய பட்டியலில் விடுதலைப்புலிகளுக்கு ஒரு சர்வதேச அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்துள்ளதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

# வன்னியில் இருபதினாயிரம் பிள்ளைகள் பாடசாலையில் இணைந்துள்ளார்கள்!

## யுனிசெப் தெரிவிப்பு

(ஆழியவளை)

யுனிசெப் நிறுவனத்தால், தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆதரவுடன், நிடோ நிறுவனத்தின் ஊடாக, முன்னெடுக்கப்பட்டு வரும் ஒவ்வொரு பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுபபுதல் என்ற திட்டத்தின் மூலம், வன்னிப் பிரதேசத்தில் - பாட சாலைக்குச் செல்லாமலிருந்த சுமார் 25 ஆயிரம் பிள்ளைகளில், 20 ஆயிரம் பிள்ளைகளைப் பாடசாலைகளில் இணைத்திருப்பதாக, யுனிசெப் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் போர் மற்றும் வறுமைநிலை, இடப்பெயர்வு போன்ற காரணங்களினால், பாடசாலை கற்றல் செயற்பாடுகளிலிருந்து இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைக்கும் நோக்குடன் யுனிசெப் நிறுவனத்தினரால், கடந்த 11/2 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் பாடசாலை செல்லாத பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புதல் என்ற திட்டத்தின் மூலம் 2000 தொண்டர்களை நியமித்து, கிராம ரீதியாக வீடு வீடாகச் சென்று பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மற்றும் பாடசாலைக்குச் செல்லாதிருக்கும் மாணவர்களின் தரவுகள் சேகரித்ததுடன் பாடசாலைக் கற்றல் செயற்பாட்டில் பிள்ளைகளை இணைப்பது தொடர்பாகப் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டு, விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவு களின்படி 25 ஆயிரம் பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் செல்லாதிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. (122)

## அதிரடிப்படையினர்

# முகாமை பலப்படுத்துவதற்கு மக்களிடம் பொருட்கள் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு ஆரையம்பதி விசேட அதிரடிப்படையினர் தமது முகாமினைப் பலப்படுத்த கருங்கல், கம்பிகள் போன்றவற்றை பலாத்காரமாகப் பெற்றுவருவதாகத் தெரியவருகிறது.

இவ்வாறு 12 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை மக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

விசேட அதிரடிப்படையினரின் இதுபோன்ற நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட மக்கள் மனித உரிமை அமைப்புகளிடம் முறையிட்டுள்ளனர்.

# 7500 இலங்கையர்கள் எயிட்ஸ் நோயால் பாதிப்பு!

மன்னார் நகரிலுள்ள பிரதேச செயலகத்தில் எயிட்ஸ் தொடர்பான, கருத்தரங்கொன்று இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் காலை 11 மணியிலிருந்து மாலை 2 மணிவரை, நடந்த இந்தக் கருத்தரங்கில்- கொழும்புத் தேசிய வைத்தியசாலை சுகாதார சேவைகள் 'டொக்டர் ரவிச்சந்திரன் கருத்துக்களை வழங்கினார். எயிட்ஸ் தொற்று எவ்வாறு ஏற்படுகின்றதென்றும், அதனால் ஏற்படும் தாக்கங்கள் பற்றியும் அவர் எடுத்துக் கூறினார். அவரின் கருத்துப்படி, இலங்கை முழுவதும் 7500 பேர் இந்த நோயினால் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 472 பேர் இறந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பிரதேச செயலக ஊழியர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் என - சுமார் 150 பேர் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டனர். (201)

# தியாகி திலீபனின் 16வது ஆண்டு நினைவுகளில்...

அவன் கோட்பாடுகளைப் பற்றி நினைத்திருந்ததெல்லாம்,

நிலைத்திருப்பவை!
தனித்துவமானவை!
இடப்பெயர்வற்றவை!
மேற்கோள் காட்டி விவாதிக்க உதவுபவை!

தாத்தாவும் அப்படித்தான். அவனுக்கு சொல்லி வந்தார்.


தாத்தாவிடம் ஒருபடம் இருந்தது. அவர் அதைச் சுவரில் ஆணியடித்து மாட்டியிருந்தார். அவர் அதைக் கழற்றி துடைத்துக் கொண்டிருந்ததையும் அவன் கண்டிருக்கிறான். அவன் அதை அவதானித்து வந்திருக்கவில்லை. அவ்விதம் கழற்றித் துடைத்து திரும்பவும் அதே இடத்தில் படத்தை மாட்டுவது தாத்தாவுக்கு ஆத்ம திருப்தியளித்திருக்கக் கூடும். அவனுக்கு மனத்தில் ஒரு நிறைவு தோன்றியதாக இப்போதும் நினைவிருக்கிறது. சட்டங்கள் பளபளத்துக் கொண்டும், கண்ணாடி பளிங்குபோல் மின்னிக் கொண்டிருக்கும்- படத்தில் இருப்பவரோ பொக்கைவாய் சிரிப்போடிருப்பார் - தலை மொட்டையாய் இருக்கும், நெற்றியில் சுருக்கங்கள் நிறைந்திருக்கும்.- வட்ட வடிவிலமைந்த மூக்குக் கண்ணாடி போட்டிருப்பார். அவரது கண்ணாடியும் பளிங்கு போல் இருக்கும் என்பதால் (அவரும் தனது கண்ணாடியைத் துடைத்து அணிந்து கொண்டிருந்திருக்கலாம். அதனூடாக சிறிய சுருங்கிய கண்கள் தெரியும், காதுகள் சற்று விரிந்தவை. வெண்நிறமீசையுமிருக்கும். ஆரம்பத்தில் படத்திலிருந்தவர் மீது அவனுக்கு ஈடுபாடு ஏற்படவில்லை. தாத்தா தான் ஒரு ஈடுபாட்டை அவனுக்கு ஏற்படுத்துவதில் முனைப்பாயிருந்தார். "படத்திலிருப்பவரோ வணக்கத்திற்குரியவர்.
அவரது ஆத்மா- மிக உன்னதமானது.
அதனால்

இருந்தார். தாத்தா இவ்வாறான நீண்ட விளக்கத்தை வழங்குபவராய் இருந்தார். அவனோ சுருக்கமான பதில்களையே விரும்பினான். ஆதலால் அவனுக்கு வெறுப்பாயிருந்தது. அவன் கேள்வி கேட்பதையும் நிறுத்திக் கொண்டான். ஆனால் தாத்தாவோ அவனுக்கு படத்திலிருப்பவர் மீதான ஈடுபாட்டை ஏற்படுத்துவதில் முனைப்பாயிருந்தார். "சத்திய சோதனைகளை அவர் சந்தித்தார். அதனால் அகிம்சைக்கே எடுத்துக் காட்டானானர்." என்றே தொடர்ந்தும் அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தார்.

அவனுக்கு அப்போது வயது பதினொன்று. அவனுக்கான சிறிய உலகில் வாழ்ந்து கொண்டிருந்தான். வண்ணத்துப்பூச்சியையும், தும்பிகளையும் பிடிப்பதற்காக ஓடிக்கொண்டிருந்தான். தும்பிகளைப் பிடித்து விரலிடுக்குகளில் அடுக்கிக்கொண்டு திரிந்த தோழர்களைப் பார்த்து ஏங்கினான்.

அந்த நாள் அவனுக்கு நன்றாகவே நினைவிருக்கிறது. ஏனெனில் அந்த நாளே, அவன் தனக்கான சிறிய உலகில் இருந்து வெளியே வந்த முதல் நாளாகவும் இருந்தது. பிரதான வீதியில் நடப்பட்டிருந்த மின்சாரக் கம்பத்தில் ஒலிபெருக்கிகள் கட்டப்பட்டு, சோககீதமிசைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இடைக்கிடையே சோககீதம் இசைப்பது நின்று போய் சிலர் "தீபம் அணைந்துவிட்டது. அகிம்சையின் திருவுரு அடங்கிவிட்டது" என்பதாய் தாழ்ந்த குரலில் சோகமாய் பேசினர். வேறு சிலர் வீதியின் இருமருங்கும் தோரணங்களையும் கறுப்புத் துணித் துண்டுகளையும் கட்டிக் கொண்டிருந்தனர்.
அவன் அந்த

வெளி பெரிதாயிற்று. அவரது வார்த்தைகளுக்கு செவிமடுப்பதைத் தவிர்த்து வரத் தொடங்கினான். தாத்தா எப்போதும் படத்தைக் கழற்றித் துடைத்து பளபளப்பாக இருக்கும்படி செய்து மாட்டிக்கொண்டிருந்தார். அவன் எதன் மீதும் ஈடுபாடின்றித் திரிந்தான். அவனுக்கு வெடிவால் முளைத்து விட்டதாக தாத்தா அடிக்கடி சொல்லிக் கொண்டுமி



பப்பட்டான்.

தாத்தா இப்போதிருந்திருந்தால்...? எப்போதும் போல் வழமையாக படத்தைக்கழற்றித் துடைத்து பளபளப்பாக இருக்கச் செய்து மாட்டிக்கொண்டிருக்கக் கூடும். தினமும் காந்தியையே அகிம்சைக்குரிய ஒரேயொரு எடுத்துக்காட்டாக அவனுக்கு நன்கு காதில் நுழையும் வண்ணம் கூறிக் கொண்டிருக்கக்கூடும்.

காந்தி யைப்போல் சத்திய சோதனைகளை எவரும் சந்திக்கவேயில்லையென சொல்லிக் கொண்டிருக்கக் கூடும்.- தொடர்ந்தும் சத்திய சோதனையை ஆரம்பத்திலிருந்து வாசித்துக்

## அகிம்சை?

**இராகவன்**

கொண்டிருக்கக் கூடும். அவனது "வெடிவால்" நன்கு வளர்ந்து விட்டதாக தினமும் முணுமுணுக்கக்கூடும்.

ஆனால் காலம் முக்கியமற்றவைகளைப் புறக்கணிக்கத் தவறுவதேயில்லை. அதனால் அவன் இப்போது தாத்தா மாட்டியிருந்த படத்தைக் கழற்றி விட்டு வேறு ஒரு படத்தினை மாட்டியுள்ளான். தாத்தாவைப் போலவே எப்போதும் வழமையாக அதைக்கழற்றித் துடைத்து பளபளப்பாக்கி திரும்பவும் மாட்டிக் கொண்டிருக்கிறான். ஆனால் அந்த படம் அந்த இடத்திலேயே இருக்கும். அவனது மகன் வருவான் அவனும் தனது தந்தையைப் போலவே செய்வான். அவனது மகன் வருவான் அவனும் தனது தந்தையைப் போலவே செய்வான். அது ஒரு முடிவிலி செய்முறையாகத் தொடரும்.

அவர் மகாத்மா- சத்திய சோதனைகளை அவர் சந்தித்தார். அதனால் அகிம்சைக்கே எடுத்துக் காட்டானார்" என தாத்தா அடிக்கடி சொல்வார். "அகிம்சை என்பது?" அவன் கேட்டான்.

"அகிம்சை என்பது அறவழிப் போராட்டம். ஆயுதமின்றிப் போராடுவதைக் கருதும். அவரது போராட்டம் அஸ்தமனமில்லா ராஜ்ஜியங்களையே ஆட்டங்காணவைத்தது. அவர் ஒரு சர்வவல்லமை பொருந்திய சக்தியாக

உலகத்தின் அந்நியனாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அவனைத் தவிர எல்லோரும் இயங்கிக் கொண்டிருந்தனர். அவன் பார்த்த முகங்களிலெல்லலாம் சோகம் அப்பிக் கிடப்பதாய் அவனுக்கு தோன்றியது. வீட்டிற்கு திரும்பிப் போகவும் மனம் வரவில்லை. பொழுதுபடும்போதுதான் வீட்டிற்கு திரும்பினான். தானும் சோகமாய் இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. எனினும் ஏனென்று தெரிந்திருக்கவில்லை. தொடர்ந்து வந்த நாட்களும் சோக கீதங்களோடு கழிந்தன. அவனுக்கும் தாத்தாவுக்குமிடையிலான இடை

ருந்தார். அதனால் அவன் அடிக்கடி தனது பின் புறத்தைத் திருப்பிப் பார்த்துக்கொண்டிருந்தான். ஒரு போதும் வெடிவால் தென்படவில்லை.

தாத்தாவின் இறுதி மூச்சடங்கும் வரை காந்தியைப் போல் சத்திய சோதனைகளை எவரும் சந்திக்கவில்லையென்றும் அகிம்சைக்கே எடுத்துக்காட்டாக எவரும் திகழவில்லை, திகழப்போவதில்லையென்றும் சொலலிக்கொண்டிருந்தார். தாத்தா மாற்றங்களை உள்வாங்கப் பயந்தார். அவரது பயத்தினைக் கண்டு தாத்தாவின் மீது அவன் பரிதா

### ஈழத்தின் இதய தீபம்

நல்லை நகர் வீதியிலே
நடத்தி வைத்தாய் யாகமொன்று
நாளு நாளும் ஆனபின்பு
நலிந்திருந்தாய் தேகமன்று
இது குறித்து இந்தியரும்
இரங்கலையே மந்திரியர்கள்
முந்தையர்கள் முற்றமதை
முடி தரித்துப் பார்த்திடவே
சத்தியத்தின் வேள்வியிலே
சடுதியாக நீ குதித்தாய்
உந்தன் மொழி தொடர்ந்திடவே
உத்தமனாம் அண்ணன் வழி
அணி திரண்ட காளையர்கள்
ஆயிரமாம் ஆயிரமாம்
உந்தனது கனவுதனை
உயர்வுடனே நனவு செய்ய!
இளைஞர்கள் நாம் அணி திரள்வோம்
இறுதிவரை நாம் மறவோம்
உறுதியிது திலீபனண்ணா!
உரிமையுடன் சபதம் செய்வோம்
ஈவிலக்கின் இளஞ்சுடரே! நீ!!
ஈழத்தின் இதய தீபம்.

**அராலியூர்.சி.செ.ரூபன்**

### தலைமகனாம் திலீபன் புகழ் பாடு!

ஊரெழுவின் பெருமகனாம் இராசையர் திருமகனாம்
பார்த்தீபனே திலீபனென் றறி!!
எம்முரிமைப் பசிபோக்கத் திலீபன்தன் குடற்பசியை
மறந்திருந்தான் மிகக்கொடிய நோன்பு!!
விடுதலைத் தாகத்தால் உழலும்எம் துயர்போக்கத்
தன்தாகம் மறந்திருந்தான் அவன்!!
திலீபனன்று கண்டகனா நனவாகும் காலம்இன்று
கனிந்து வரும் செய்தியினைக் கேள்!!
திலீபனன்று வேண்டி நின்ற தமிழீழம் விரைந்துதிக்க
உழைப்பதுவே எம்பணியாம் தெளி!!

**வயலூர் முருகன்**



### மானத்தமிழ்காக்கும் மானுடதேசமெடா!

அண்ணனே எங்கள் ஆருயிர்த் திலீபனே
அகிம்சைக்கு வித்தாய் அடி கொடுத்தவனே - நீ
மண்ணாளும் ஈழத்தில் மாபெரும் வீரனடா!
மானத்தமிழ் காக்கும் மானுட தேசமெடா!
உண்ணா விரதமென உலகிற்கு ஊட்டியவனே
உன்னுடல் உருகி நல்லூரில் உயிராடினாய்:
கண்ணெனத் தமிழிற்கு காலெடுத்து வைத்தாய்
காந்தி தேசத்தின் முகத்தினைக் கிழித்தாய்
அண்ணா! உந்தன் கனவுகள் நனவாகிடுமடா!
ஆண்டதோர் தேசம் மீண்டும் உருவாகுமடா!

**என்.பிரேமசீலன்**

### தியாகத்தின் திருவுருவம்

ஊரெழுவில் உதித்த உத்தமனே.
பார் போற்ற வாழ்ந்திட்ட
எங்கள் பார்த்தீபனே...
திலீபா...
அன்னல் காந்தி காட்டிய
பாதையிலே...
அகிம்சை என்னும் வடிவெடுத்து
பாரதத்து படைகளிடம்
நீதி கேட்டு – நீ...
பட்டினி கிடந்தபோது
பார்த்தேன் ஐயா – அன்று
அன்றல்ல அது இன்றுபோல் உள்ளதுவே.
ஆனால்
ஈராறு தினங்கள்
ஈரெட்டு ஆண்டுகளாய் சென்றிடினும்
மறக்க முடியவில்லை
நீ இருந்த காட்சிதனை...
நாவரண்டு நாவரண்டு...
உந்தன்...
நாதமேனி பேச்சிழந்து...
போன போது...
நாம் எல்லாம் பார்த்துத் தான்
இருந்தோம் – பாரினிலே.
பாரதம் எமக்கு
நீதி தரும் என்று
ஆனால்...
பாரதம் இங்கே பாதகம் செய்யும்
என்று கனவிலும் நாம்
கருதவில்லை...
தியாகத் திருவுருவே
திலீபா...
மக்கள் புரட்சி வெடிக்குமென்றாய்
வெடிக்கின்றது...
சுதந்திர தமிழீழம் மலரும் என்றாய்
மலரும் நாள் வெகுதூரம் இல்லை.
உன் தாகம் தீருமையா.
நிச்சயம் ஈழம் காண்போமையா!

**கைதடியூர்.சசி.**

# காஷ்மீர் தொடர்பான பேச்சுக்கு இந்திய அரசு முன்வருவதில்லை!

## குற்றஞ்சாட்டுகிறார் பாகிஸ்தான் அதிபர் முஷரப்

(நியூயோர்க்)

உலகின் அதிக ஆபத்துமிக்க காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக எதுவித பேச்சுவார்த்தைக்கும் இந்தியா முன்வருவதில்லை என்று, பாகிஸ்தானிய அதிபர் பர்வேஷ் முஷரப் இந்தியா மீது குற்றஞ் சாட்டியுள்ளார். ஐ.நா.சபையில் உரையாற்றும் போதே முஷரப் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

ஐ.நா.சபையில் தற்போது நடைபெற்றுவரும் மாநாட்டில், அமெரிக்க அதிபர் புஷ் உடன் இந்தியாவினதும், பாகிஸ்தானினதும் அதிபர்கள் 'பயங்கரவாதத்திற்கெதிரான போர்' என்னும் விடயம் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தியா ஆயுத பலத்தை பெருக்கி வருவதால், தெற்காசியாவின் சமநிலை குழப்பமடைவதாகவும் முஷரப் தெரிவித்தார். தெற்காசியாவில் சமாதானம், பாதுகாப்பு மற்றும் சமநிலை என்பவற்றை விரும்பும் நாடுகள் இந்தியாவுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதை நிறுத்தவேண்டும் என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வுக்கு வருவதற்கும், காஷ்மீர் எல்லைப்பகுதியில் ஒரு யுத்த நிறுத்தமொன்றை மேற்கொள்ளுவதற்கும் இந்தியா முன்வரவேண்டும் என்று, இந்தியாவிடம் முஷரப் ஐ.நா. மாநாட்டில் கோரிக்கை விடுத்தார்.

எனினும், இந்தக் கோரிக்கையை இந்தியா உடனடியான ஏற்க மறுத்துவிட்டது. அத்துடன், பாகிஸ்தானுக்கு காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக பேசுவதற்கு எந்தத்தார்மீக உரிமையும் இல்லை என்றும், காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி, இதில் ஒரு அங்குல நிலத்தைக் கூட விட்டுக்கொடுக்கமுடியாது என்று, இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா கண்டிப்பாக தெரிவித்தார்.




இதேவேளை,

பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலை அமெரிக்க அதிபர் ஐ.நா.மாநாட்டில் கூறும்போது, இந்தியாவை அதில் சேர்த்துக்கொள்ளாதது தமக்கு கவலை அளிப்பதாக, இந்திய உதவி பிரதம மந்திரி எல்.கே.அத்வானி தெரிவித்துள்ளார்.

கஷ்மீர் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வுகாண இந்தியா முன்வராவிட்டால், எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையில் அணுஆயுதப் போர் மூளலாம் என்று, முஷரப் அண்மையில் எச்சரித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## பக்தாத்தில் உள்ள அமெரிக்க

# தொலைக்காட்சி நிலையத்தில் குண்டுவெடிப்பு; காவலாளி பலி!



ஈராக்கின் தலைநகர் பக்தாத்தின் உள்ள அமெரிக்கத் தொலைக்காட்சி சேவையான 'என்.பி.சி' அமைந்துள்ள பயணிகள் விடுதி ஒன்றில் நடைபெற்ற குண்டுவெடிப்பில் சோமாலியா நாட்டைச் சேர்ந்த காவலாளி ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் இருவர் காயமடைந்தனர்.


தொலைக்காட்சி நிறுவனத்தின் மின்பிறப்பாக்கி அமைந்துள்ள கட்டடப் பகுதியிலேயே குண்டுவெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கில் மேற்கு நாட்டைச் சேர்ந்த தொடர்புசாதன ஊடகம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்துவது இதுவே முதல்முறை என்று தெரிவிக்கப்படுகிறது.

பத்திற்கு மேற்பட்ட தொலைக்காட்சி நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குண்டுவெடித்த சந்தர்ப்பத்தில் அந்தக் கட்டடத்திற்குள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் - ஈராக்கில் இருக்கும் மேற்கு நாடுகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் தமது பாதுகாப்பு தொடர்பாக சிந்திக்கத் தூண்டியுள்ளதாக பி.பி.சியின் நிருபர் மைக்கல் கிவேரிங் தெரிவித்தார். இதுவரை, படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தற்போது, அங்குள்ள வெளிநாட்டு அமைப்புக்கள் மீதும் நடத்தப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொலம்பியாவில் கடத்தப்பட்ட சுற்றுலா பயணி தப்பிவந்தார்!



அண்மையில் கொலம்பிய காட்டுப் பகுதியில் கடத்திச் செல்லப்பட்ட எட்டுப் பேரில் பிரிட்டனைச் சேர்ந்த மத்தியூ ஸ்கொட் என்பவர் தப்பிவந்துள்ளார்.

இவர் 12 நாட்கள் ஆற்றுநீரை மட்டுமே உட்கொண்டு உயிர் பிழைத்ததாக தெரிவித்துள்ளார். தன்னைக் கடத்திச் சென்றபோது, தான் மலையிலிருந்து அருகிலுள்ள ஆற்றுக்குள் குதித்துத் தப்பியதாகவும், பின்னர் ஆற்றுக்கு அருகில் உள்ள இந்திய மக்கள் வசிக்கும் கிராமமொன்றுக்குச் சென்றதாகவும் தெரிவித்தார்.

பின்னர் அங்கிருந்து களைப்படைந்த நிலையிலும், உடல் வறட்சி ஏற்பட்ட நிலையிலும், அதிக வெப்பத்தினால் தோல் சுருங்கிய நிலையிலும் - கொலம்பியாவின் வடபகுதியில் அமைந்த அமெரிக்க படைத்தளத்தை சென்றடைந்தார்.

தான் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக இவர் விபரிக்கையில், தாங்கள் கடத்தப்பட்ட நாள் தொடக்கம், தமக்கு எதுவித உணவும் வழங்கப்படவில்லை என்றும், மழையிலும், புகார்களுக்கூடாகவும் தம்மை அழைத்துச் சென்றதாகவும், தான் அந்தச் சந்தர்ப்பத்திலேயே தப்பிவந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சுவீடன் வெளிநாட்டமைச்சர் மீதான

# கொலைச் சந்தேக நபர் பொலிஸாரால் விடுதலை



சுவீடன் வெளிவிவகார அமைச்சர் அனா லிண்டா கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட நபரை பொலிஸார் விடுவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபருக்கும், அனா லிண்டாவின் கொலைக்கும் சம்பந்தம் எதுவும் இல்லை என, விசாரணைகளிலிருந்து தெரியவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

லிண்டா கொலை தொடர்பாக இரண்டாவதாக கைதுசெய்யப்பட்ட நபர் மீதே தமக்கு அதிகளவு சந்தேகம் உள்ளதாகவும், இவர் பற்றிய தகவல்கள் எதனையும் தெரிவிக்கமுடியாது எனவும் பொலிஸார் தெரிவித்தன்ர்.

1986 ஆண்டு சுவீடன் பிரதமர் ஒலவ் பாம் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளே இதுவரை முடியவில்லையாதலால், அனா லிண்டாவின் கொலை தொடர்பான விசாரணைகளை மிகவும் அவதானமாக மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்



**1980 - 88 காலப் பகுதியில் ஈரான், ஈராக்கிடையே நடைபெற்ற போர் தொடர்பான கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த 'சகாப் 2' எறிகணையைப் படத்தில் காணலாம்.**

# உலக நோக்கு

# ஈராக் பாதுகாப்பு அமைச்சர் மீது வழக்குத் தொடரப் போவதில்லை

## அமெரிக்க இராணுவம் தெரிவிப்பு

சதாமின் ஆட்சிக் காலத்தில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த சுல்தான் ஹசீம் அஹமட் தானாகவே அமெரிக்கப்படையினரிடம் சரணடைந்ததால், அவர் மீது வழக்கு எதனையும் தொடரப்போவதில்லை என, அமெரிக்கா இராணுவம் கூறியுள்ளது.

சரணடைந்த அஹமட், ஈராக்கில் உள்ள ஆயுதங்கள் தொடர்பான விபரங்களை வழங்குவார் என்ற நம்பிக்கை இருப்பதாக, அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

அண்மையில் ஈராக்கில் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபரங்களின் படி சில இடங்களில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக சந்தேகிக்கப்படுவதாகவும், இது தொடர்பான தகவல்கள் அஹமட்டுக்குத் தெரிந்திருக்கலாம் என்றும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகத் தெரிவித்தே, அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுத்தது. ஆனால், அங்கு இதுவரை ஆயுதங்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படாததால், அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் பெரும் சிக்கல்களை எதிர்நோக்குவதுடன், இந்த விடயம் தொடர்பாக ஐ.நா வின் ஆதரவினையும் பெறமுடியாத நிலையில் உள்ளார். ஆகவேதான், ஈராக்கில் பேரழிவு ஆயுதங்களை கண்டுபிடிக்க வேண்டும் என்பதில் அமெரிக்கா முனைப்புடன் செயற்படுவதாகக் கூறப்படுகிறது.

# ஜப்பான் பொதுத் தேர்தல் நவம்பரில்!

ஜப்பானின் பொதுத் தேர்தலை நவம்பர் மாதம் 9 ஆம் திகதி நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக, ஜப்பானியப் பிரதம மந்திரி ஜூனிசிரோ கொயுசிமி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தை ஒக்டோபர் 10 ஆம் திகதி கலைக்க உள்ளதாகவும், பொதுத் தேர்தலுக்கான பிரசாரங்கள் ஒக்டோபர் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஊர்சுற்றி எழுதுவது

'சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி' என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு.

வவுனியாவில் பொங்குதமிழ் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கான கலந்துரையாடல்கள் சந்திப்புகள் இடம்பெற்றன.

இந்தக் கூட்டங்களிலெல்லாம் அரச ஊழியர்கள், யாரைக்கேட்டு கலந்துகொண்டார்கள், இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். பொங்கு தமிழ் நிகழ்ச்சிகளில் பாடசாலை மாணவ, மாணவிகள் கலந்து கொள்ளக்கூடாது அவர்களை இந்த நிகழ்ச்சிகளில் சேர்த்துக்கொள்ளக்கூடாது.

இப்படியெல்லாம் வவுனியாவில் இராணுவ அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். கண்டனம் செய்தார்கள். பின்னர் நிபந்தனைகளை விதித்தார் கள். முடிவில் மௌனமாகி வெறும் பார்வையாளராக நின்றனர்.

வடக்கிலும் - கிழக்கிலும் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் அரசாங்க கட்டடங்கள் மீது புலிக் கொடிகள் பறக்கவிடப்படுகின்றன. போர்நிறுத்த உடன்படிக்கைகளையும் புலிகள் மீறி நடந்து கொள்கின்றனர். புலிகளின் எல்லா நடவடிக்கைகளுக்கும், ரணில் அரசாங்கம் இடம்கொடுத்துக்கொண்டிருக்கிறது.

இப்படி சந்திரிகா அம்மையாரும் அவரது சகாக்களும் கொழும்பிலிருந்துகொண்டு குரல்கொடுத்து வருகிறார்கள். இவர்களின் ஊது குழல்களான சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளும், வானொலி, தொலைக்காட்சிகளும் புலிகளைப் பற்றி எப்படி எப்படியெல்லாம் பயங்கரவாதிகளாகப் பிரச்சாரம் செய்ய முடியுமோ அப்படியெல்லாம் இன்னும் விடாது, செய்துகொண்டேயிருக்கின்றன. இன்னும் ரூபவாகினியும் இவர்களுக்கெல்லாம் சளைத்ததல்ல.

இடைக்கால நிர்வாக கட்டமைப்புப் பற்றி அரசு கொடுத்த நகல்த்திட்டத்திற்குப் பதிலாக தங்களுடைய யோசனைகளையும் உள்ளடக்கிய புதிய வரைபொன்றை பாரிஸிலும், சுவிஸிலும் பல சட்டவல்லுனர்களைச் சந்தித்து ஆலோசனை பெற்ற புலிகள், இப்பொழுது அயர்லாந்துக்குச் சென்று கலந்துரையாடி, அடுத்த மாத மத்தியில் அரசிடம் சமர்ப்பிக்கவுள்ளனர்.

புலிகள் தமது யோசனைகள் அடங்கிய புதிய வரைபை வெளிநாடுகளில் உள்ள நிபுணர்களுடன் கலந்தாலோசனை செய்து சமர்ப்பித்தால் என்ன நாம் நமது உள்நாட்டு சட்ட நிபுணர்களுடன் அந்த வரைபைப் பற்றிக் கலந்துரையாடி புதிதாக வரைய வேண்டும் என்று இனவாதத்தைக் கக்கிவரும் ஒரு ஆங்கிலத் தினசரி எழுதுகிறது. இதன் சகோதரச் சிங்களத் தினசரி என்ன எழுதுகிறதோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

யாழ்ப்பாணத்தில் முதன்முதலில் பொங்குதமிழ் எழுச்சிக் கொண்டாட்டம் நடத்தமுற்பட்டபோது, இராணுவத்தினர் யாழ்.பல்கலைக்கழகத்தை முற்றுகையிட்டனர். மக்களை அப்பகுதிக்குச் செல்லவிடாமல் தடைசெய்தனர். மாணவர்களை வெளியே வராமல் தடுத்தனர். துப்பாக்கிகளைத் தயார்செய்து பல்கலைக்கழத்திற்கு வெளியே இராணுவமும் பொலிஸும் தயாராக நின்றனர்.

திட்டமிட்டபடி பொங்குதமிழ் பிரவாகித்து ஓடியது. எழுச்சியை இராணுவத்தாலோ பொலிஸாராலோ கட்டுப்படுத்த முடியாமற்போனது.

இதன் விளைவாகத்தான் பொங்குதமிழ் பின்னர் கிழக்கிலும், வவுனியாவிலும் மற்றைய இடங்களிலும் பரவியது.

இப்பொழுது வவுனியாவில் ஆரம்பத்தில் இராணுவம் தனது கெடுபிடி உத்தரவுகளையும், நிபந்தனைகளையும் விதித்திராவிட்டால் வவுனியாவில் இவ்வளவு தொகையினர் உணர்ச்சிக் கொந்தளிப்புடன் திரண்டிருக்கமாட்டார்கள்.

இதனால்,

'சும்மா கிட்க்ந சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி என்ற பழமொழியை - ஊதிக் கெடுத்தனராம் ஆமி' என்று மாற்றி அமைத்துக்கொள்ளலாமா?

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மேற்கொணடு வரும் சமாதானப் பேச்சுக்கள் ஒன்றில் போர் அல்லது தனிநாட்டுக்கு - தமிழீழம் உதயமாகத்தான் வழிசெய்யும் என்று, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா கருதுவதாக அவருடைய ஊடகப் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

தனது பேச்சுக்களும் செயல்களும் அப்படி ஒரு நிலைக்கு இட்டுச்செல்லும் என்பதை சந்திரிகா அம்மையார் உணர்ந்துகொண்டார். அப்படி நிலை ஏற்பட்டால், தம்மீதுதான் எல்லோரும் குற்றஞ்சுமத்துவார்கள் என்பதையும் அம்மையார் புரிந்துகொண் டார். இதனால் தாம் இப்பொழுதே பழியை ரணில் மீது சுமத்திவிடுவதற்கு அம்மையார் துணிந்துவிட்டார்.

இணைப்பாடசி என்ற சமஷ்டி ஆட்சி கேட்ட தந்தை செல்வா, அடங்காத் தமிழர் தமிழீழம் கேட்டபோது அமிர்தலிங்கத்தைக்கொண்டு அதை முழுமூச்சாக எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார். பின்னர் சிங்களப் பேரினவாதிகளினதும் சந்திரிகாவின் அம்மா சிறிமாவின் கெடுபிடிகளாலும் 1976 ஆம் ஆண்டில் தந்தை செல்வா 'இழந்த தமிழரசை மீள அமைப்போம்' என்று தமிழீழக் கோரிக்கையை நாடாளுமன்றத்திலே முன் வைத்தார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி என்று வடக்கிலும் - கிழக்கிலும் இராணுவம் நிலைகொண்டு துப்பாக்கிகளுடனும், பீரங்கிகளுடனும், கவச வாகனங்களுடனும் இரவு பகலாகக் கண்விழித்து - எதற்காகவோ காவல் காத்து நிற்பது உண்மைதான். ஆனால், நடை பெறுவதோ வேறு. இன்று கடைகள், வர்த்தக நிலையங்கள் அரச அலுவலகங்கள் திலீபன் நினைவை அனுஷ்டிக்கின்றன. எங்கும் புலிக்கொடிகள் பறக்கின்றன.

சந்திரிகா அம்மையார் இன்னும் சிறிது ஆழமாகச் சிந்திக்கவேண்டும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வடமராட்சி வடக்குக் கடற்பகுதியில் முருகைக்கல் அகழ படையினர் தடை

## கடற்தொழிலாளர் விசனம் தெரிவிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி வடக்குக் கரையோரப் பகுதியில் - இறங்குதுறையிலுள்ள முருகைக்கற்களை அகற்றப் படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.


மீனவர் இறங்குதுறைமுகப் பகுதியிலுள்ள முருகைக் கற்பாறைகளை அகற்றிப் புனரமைப்பதற்கு - வடமராட்சி மீனவர்கள் முற்பட்டபோதே, படையினர் தடுத்தனர். இதன்போது அங்கு வந்த இராணுவ அதிகாரிகள், இந்தப் பகுதியில் புனரமைப்புச் செய்வதற்கான அனுமதியை தமது மேலதிகாரியிடம் பெற்றுத் தருவதாகவும், அதுவரை புனரமைப்பில் ஈடுபடவேண்டாம் எனவும் கூறித் தடுத்தனர்.

இதனையடுத்து கடற்தொழிலாளர்கள் சங்கம், வடமராட்சி பிரதேச செயலருக்குத் தெரியப்படுத்தினார்கள். பிரதேசசெயலர் இதனை அரசாங்க அதிபரிடம் தெரிவித்து பதில் பெற்றுத் தருவதாகக் கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக - இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் முறைப்பாடு செய்துள்ளனர். இந்தப் பகுதியினைப் பார்வையிட்ட கண்காணிப்புக் குழுவினர் சகிதம், படையினர் உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசித்துப் பதில் தருவதாகவும் கூறியுள்ளனர்.

படையினரின் இந்த நடவடிக்கை காரணமாக, கடற்தொழிலாளர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும், அதேநேரம் கடும் விசனமும் தெரிவித்தனர். போர் நிறுத்த உடன்படிக்கையின்படி, கடற்தொழிலாளர்கள் சுயாதீன மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுவருவதனை படையினர் தொடர்ந்தும் தடுத்து வருகின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (202)

## நாற்சந்தி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் - சிரேஷ்ட மாணவர்கள் சிலரால் தாக்கப்பட்ட நிலையில் யாழ். மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த மாணவர் தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்படும் இரு மாணவர்கள் - துணைவேந்தரால், பல்கலைக்கழக கல்விசார் - கல்விசாரா நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இரு செய்திகளும் ஆரோக்கியமான மாணவ சமுகத்திற்குக் கௌரவத்தையும் பெருமையையும் எந்தவகையிலும் ஏற்படுத்துவன அல்ல.

பல்கலைக்கழகப் பிரவேசம் என்பது எவ்வளவு கடினமான, கற்றலுடன் கூடிய ஒரு செயற்பாடு என்பதைக் கூறவேண்டியதில்லை.

கனவுகளும், இலட்சியங்களும், சாதனைபுரியும் நோக்கும் கொண்ட நாட்டின் எதிர்கால மன்னர்கள் இவ்வாறு நடப்பது அவமானகரமானதாகும்.

கலைக்கழகத்தை கொலைக்கழகமாக மாற்றும் செயற்பாடு மன்னிக்க முடியாததாகும்.

இந்தச் சம்பவம் சில பெற்றோர்களை அச்சமடைய வைத்துள்ளது. சில பெற்றோரை அவமானத்தால் தலைகுனியவும் வைத்துள்ளது. 'பல்கலைகளில் அடுத்தவனைச் சிதைக்கும் பகிடிவதையும் ஒரு கலைதான் என எண்ணிவிட்டார்களோ' என்கிறார், ஒரு ஆசிரியர் பெருமூச்சுடன்...

-தெருவாசி

## தரம் 5 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் கருத்தரங்கு

தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு - யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன், புலமைப் பரிசில் இலவசக் கருத்தரங்கொன்று நடத்தப்பட்டுவருகின்றது.

மேல்மாகாண ஆசிரிய ஆலோசகர் அம்பிகைபாகனால் நடத்தப்படும் இந்தக் கருத்தரங்கு காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறும்.

இதன்படி - நாளையதினம் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையிலும், எதிர்வரும் 28 ஆம் திகதி- புனித ஜோன் பொஸ்கோ கல்லூரியிலும், 29 ஆம் திகதி - கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்திலும், 30 ஆம் திகதி - யாழ். இந்து ஆரம்ப மகளிர் வித்தியாலயத்திலும், அடுத்த மாதம் முதலாம் திகதி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், 2 ஆம் திகதி - புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியிலும் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொலிஸ் மா அதிபரின் சேவை நீடிப்பு; ஜனாதிபதி அடுத்த வாரம் தீர்மானிப்பார்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவின் சேவைக்காலத்தை, மேலும் ஒரு வருடம் நீடிப்பதற்கான தீர்மானத்தை - அடுத்த வாரமளவில் ஜனாதிபதி மேற்கொள்வார் என, ஜனாதிபதி செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இதேவேளை, சேவைக்கால நீடிப்பு விடயமாக, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தமது சிபார்சினை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்துள்ளார்.

இது சம்பந்தமாக ஜனாதிபதியின் தீர்மானம் இதுவரை வெளியாகவில்லை. ஆனால், பொலிஸ் மா அதிபரின் சேவைக்காலம் அடுத்த மாதம் 14 ஆம் திகதியுடன் பூர்த்தியாகின்றது.

இவரின் சேவைக்காலத்தை நீடிக்காதுவிட்டால், இவருக்கு அடுத்த தரத்தில் உள்ள மூன்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களின் தரங்களை நிர்ணயிப்பதில் பொலிஸ் ஆணைக்குழு ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கூட்டணி அலுவலகத்தில் திலீபன் நினைவுநாள்

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் 16 ஆம் ஆண்டு நினைவுநாள் நேற்று யாழ். தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் இடம்பெற்றது.

தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து, ஈகைச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் இடம்பெற்றது.

## பிரிட்டிஷ், புலிகள்...

அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா, துணை அரசியல் பொறுப்பாளர் குயிலின்பன், நிருவாகப் பொறுப்பாளர் தேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகளுக்குமட்டுமன்றி, அரசுக்கும் அழுத்தத்தைக் கொடுத்து சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவும், நிரந்தரத் தீர்வைக் காணவும் தமது அரசாங்கம் முழுநேர ஒத்துழைப்பையும் நல்குமென அரசியல் பிரிவுச் செயலாளர் மார்க்கிரட் இந்தச் சந்திப்பின்போது உறுதியளித்தார்.

இதேவேளை - அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களின் நிலைப்பாடுகள் மற்றும் இயல்பு வாழ்க்கைக்கு வழிவகுத்தல் தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்தும் விடுதலைப் புலிகள், பிரிட்டிஷ் குழுவினரிடம் விளக்கியதுடன்,

தாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் சீண்டப்பட்ட போதிலும், யுத்தத்திற்குச் செல்லாமல் சமாதான விரும்பிகளாகப் பொறுமை காத்துவருவதையும் அவர்கள் எடுத்து விளக்கினார்.

மாற்று இயக்கத் தலைவர்கள் கொல்லப்படும் சம்பவங்களில் விடுதலைப் புலிகள் மீது வீண்பழி சுமத்தப்படுவதாகக் குழுவினரிடம் கவலை தெரிவித்த விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள்,

புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி இந்தமாற்று இயக்கத்தினர் வடக்கு - கிழக்கில் இருக்கமுடியாது என்பதனையும்சுட்டிக்காட்டி விளக்கினர்.

அதேவேளை, விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பூவண்ணன், ஆதரவாளர் பரணீதரன் போன்றோர் கொல்லப்பட்ட சம்பவங்களையும் நிதர்சனமாக எடுத்துக் கூறி விளக்கினர்.

சுமார் நாற்பது நிமிடங்கள் இடம் பெற்ற இந்தச் சந்திப்பும் கலந்துரையாடலும் திருப்திகரமாக இடம் பெற்றதாக விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (07)

## இராணுவ...

கரித்து வருகிறது. இதனைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர பாதுகாப்புப் படையினர் முன்வரவேண்டும் எனவும் அவர் கோரிக்கைவிடுத்தார்.

## பொதுமக்கள்.....

சாங்கத்திடம். சமரப்பிக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இடைக்கால நிர்வாகசபை உருவாக்கப்பட்டாலன்றி, விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளப்போவதில்லை என்று தெரிவிக்கப்படுவதில் எவ்வித உண்மையுமில்லை என்றும், அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேலும் கூறினார்.

## மக்களின்.....

ஏ.எஸ்.சி. சாந்த மற்றும் மடு உதவிப் பங்குத் தந்தை றெவல் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

மடுப்பகுதியைச் சேர்ந்த அடையாள அட்டை உள்ள மக்கள் சென்றுவரலாமெனவும், அடையாள அட்டைகள் இல்லாத மக்களின் விபரங்கள் மன்னார் அரச அதிபரூடாக மடு சோதனைச்சாவடி இராணுவத்தினருக்கு கொடுக்கப்பட்டுள்ளதெனவும், அவர்கள் தங்களது விபரங்களைப் பதிந்துவிட்டு செல்லலாமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அரச அதிபர் இந்தப் பாதைத் திறப்பு இந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளதெனத் தெரிவித்தார்.

மன்னார் அரசியற்துறைப் பொறுப்பாளர் அமிர்தாப், மக்களின் போராட்டம் இந்தப் பாதைத்திறப்பின் மூலம் வெற்றியடைந்துள்ளதெனவும், போராடினாலே வெற்றி கிடைக்குமெனவும் தெரிவித்தார். (201)

## பிரபாகரனின் பட.....

யத் தலைவரின் உருவப்படம், தேசியக்கொடி என்பவற்றை எடுத்து வந்திருந்தனர்.

இவர்களை முகாமாலை சோதனைச் சாவடியில் தடுத்து நிறுத்திய படையினர், அவற்றைக் கொண்டு செல்வதற்கு தடை விதித்தனர்.

பின்னர் - தொடர்ந்து படங்களையும் தேசியக்கொடியினையும் எடுத்துச் செல்ல அனுமதிக்க முடியாது எனப் படையினர் தெரிவித்தனர். இதனையடுத்து வாக்குவாதம் மோசமடைந்து கைகலப்பாக மாறியது.

இதனையடுத்து பெருமளவிலான படையினர் அந்தப் பகுதியில் குவிக்கப்பட்டனர். இதனால் அப்பகுதியில், பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த நிலையில், நிலைமை மோசமடைய படையதிகாரிகள் அப்பகுதிக்கு சென்று நிலைமையை கட்டுப்படுத்த முயற்சித்தனர். அந்தப் பகுதியில் நின்ற பெருமளவிலான படையினரை அப்பகுதியிலிருந்து அகற்றியதையடுத்து மாணவர்களை தேசியத்தலைவரின் படம், தேசியக் கொடி என்பவற்றை எடுத்துச்செல்ல படையினரால் அனுமதிக்கப்பட்டது.

## தியாகி....

காலை 9 மணிக்கு உண்ணாவிரதத்துடன் ஆரம்பமாகும்.

தீவகத்தில். - புயங்கூடல் ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலய முன்றலிலும், நெடுந்தீவுப் பிரதேசத்தில் - பிரதேசசபைப் பொது மண்டபத்திலும் காலை 9 மணிக்கு உண்ணா நோன்பு ஆரம்பமாகும்.

தென்மராட்சிக் கோட்டத்தில் மீசாலை மாவடிப் பிள்ளையார் ஆலய முன்றலில் நிகழ்வுகள் இடம்பெறும்.

அனைத்துக் கோட்டங்களிலுமுள்ள மக்களின் நலன்கருதி இலவசப் போக்குவரத்து வசதிகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

எனவே, இன்றைய திலீபனின் இறுதிநாள் நிகழ்வில் அரச அலுவலகங்களில் பணிபுரிவோர், கூட்டுறவுத் துறையினர், தனியார் துறையினர் அனைவரும் அவர்களது பணிகளினை இன்றைய தினம் இடைநிறுத்தி நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு, யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் கேட்டுக்கொண்டனர். (111)

நமது ஈழநாடு ஓராண்டு நிறைவையொட்டி
நடத்தப்பட்ட போட்டிகளில்
பரிசுபெற்றோர் விபரம்

**சிறுகதை**

முதற் பரிசு
'செழிப்பைத் தேடும் பறவைகள்'
பெ.சிறிகந்தநேசன்
2 ஆம் வருடம் கலைப்பீடம்
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு
"நியாய சங்கீதங்கள்"
கே.வி.குணசேகரம்
கோப்பாய் மத்தி
கோப்பாய்.

மூன்றாம் பரிசு
"கண்ணம்மாவும் சொல்வாள்"
சி.கதிர்காமநாதன்
டச்சு வீதி
தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

**கட்டுரை**

(கீழ்ப்பிரிவு மாணவர்களுக்கானது - சூழல் மாசடைதல்)

முதலாம் பரிசு
ஜெ.தவரூபன்
யா/ மல்லாகம் மகா
வித்தியாலயம்

இரண்டாம் பரிசு
ஹீ.மயூரதி
வல்வை மகளிர் மகா
வித்தியாலயம்

மூன்றாம் பரிசு
மயூரி மகேந்திரன்
யா/ பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரி

(மேற்பிரிவு மாணவர்களுக்கானது - அறிவியலின் வளர்ச்சி)

முதலாம் பரிசு
ராதிகா முருகையா
யா/இந்து மகளிர் கல்லூரி

இரண்டாம் பரிசு
உமா இளையதம்பி
வட/இந்து மகளிர் கல்லூரி

மூன்றாம் பரிசு
வை.கோவிந்தன்
யாழ்/புனித பத்திரிசியார் கல்லூரி

**கவிதை**

முதலாம் பரிசு
"காலம் எப்போது வரும்"
முருகையா சுதேசிகன்
சிறிவாகிஸ்வரி வீதி,
கோண்டாவில் வடக்கு,

இரண்டாம் பரிசு
"ஒரு அகதியின் அவலம்"
எம்.சுயன்
கோண்டாவில் வடக்கு
கோண்டவில்.

மூன்றாம் பரிசு
"எங்களை வாழவிடுங்கள்"
கிருஸ்ணன் கமலதாஸ்
1 ஆம் வருடம் கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

பரிசு பெற்றவர்கள் 30.09.2003 இற்கு முன்னர்
எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**பத்திரிகை விநியோகஸ்தர் தேவை**

தினமும் கிளிநொச்சி சென்று பத்திரிகை விநியோகம் செய்வதற்கு ஆர்வமும், விருப்பும் உள்ளவர்கள் தேவை சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் அதற்குரிய ஆவணங்கள் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றுடன் 29.09.2003 திங்களன்று காலை 10 மணிக்கு எமது அலுவலகத்திற்கு நேரில் சமூகம் தரவும்.

267 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

(இ)

நிர்வாக இயக்குநர்
நமது ஈழநாடு

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.